**இலங்கை வங்கி மற்றும் அதன் துணைக்கம்பனிகள் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை வங்கியினதும் (''வங்கி'') வங்கி மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் (''தொகுதி'') 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையே நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. வங்கியானது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 5(1) ஆம் பிரிவில் அவருக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி 1992 மே 14 ஆம் திகதிய 715 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட முன்னாள் நிதி அமைச்சரின் கட்டளையொன்றின் மூலம் குறித்த நிதி அதிகாரச்சட்டத்தின் பகுதி II இலுள்ள ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

வங்கி மற்றும் தொகுதியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொகுதி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தொகுதியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி

இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வங்கியினதும் தொகுதியினதும் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொகுதியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தொகுதி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தொகுதிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொகுதியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | வங்கியின் நிதிக்கூற்றுக்கள் மைய வங்கி முறைமைகளிலிருந்து பெறப்பட்ட நிதித் தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன. பின்னர் IFRS சீராக்கங்கள் தொடர்பான பதிவுகள் அனுப்பப்பட்டு, அந்தத் தகவல் spread sheets இல் பேணப்படுகிறது. இது தரவு இழப்பு அல்லது கையாளுதலுக்கு வழிவகுக்கும். எனவே, தரவின் சரியானதன்மையை உறுதி செய்வதற்காக முழுமையான நிதிக்கூற்றுக்களை தயாரிக்க முழுமையான தானியங்கு முறைமைமைத் தீர்வின் அவசியத்தை வங்கி மதிப்பீடு செய்ய வேண்டும். | இந்த நேரத்தில் நிதிகளின் முழுமையான தொகுப்பைத் தயாரிப்பதற்குக் வங்கியிடம் முழுமையான தானியங்கு முறைமை தீர்வு காணப்படவில்லை. வங்கியானது தன்னியக்க முறைமையை (நிதி அறிக்கையிடல் முறைமை) உருவாக்கும் கட்டத்தில் உள்ளது, இது நட்டக்கழிவு ஏற்பாட்டு கணிப்பீடு, MIS அறிக்கையிடல் மற்றும் நிதிக்கூற்றை தயாரித்தல் ஆகியவற்றிற்கு உதவுகிறது.<br><br>எனினும், தற்போது, நிதித் தகவல்களில் பெரும்பாலானவை முக்கிய வணிக முறைமைகளிலிருந்து பெறப்படுகின்றதுடன் நட்டக்கழிவு கணிப்பீட்டின் பெரும்பகுதி நிதி அறிக்கையிடல் முறைமையால் ஆதரிக்கப்படுகிறது. நிதி அறிக்கையிடல் முறைமையின் கட்டம் 3 ஐ பூர்த்தி செய்த பின்னர் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதை தானியங்கப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.<br><br>மேலும், வங்கியின் நிதிக்கூற்றுக்களின் முழுமையான தயாரிப்பு செயன்முறையும் உள்ளக கணக்காய்வு பிரிவு மற்றும் வெளியக கணக்காய்வாளர்களால் கணக்காய்வு செய்யப்படுகிறதுடன் கணக்காய்வாளர்கள் இருவரும் பரிந்துரைத்தவாறு தேவையான கட்டுப்பாடுகள் நிறுவப்பட்டுள்ளன என்பதை | நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு செயன்முறையை தானியங்கப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | தங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம். | |
| (ii) | கூட்டு நட்டக்கழிவை கணிப்பிடுவதற்கு வங்கி ஒரு மென்பொருளை கொள்வனவு செய்திருந்த போதிலும் தவணைப்பணம் செலுத்த தவறியதன் வெளிப்பாடு (EAD) மற்றும் எதிர்பார்க்கப்படும் கடன் நட்டம் (ECL) தொடர்பான சீராக்கங்கள் இன்னும் கைமுறை மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. | வங்கி PD மற்றும் LGDs உடன் சேர்த்து முமைமை மூலம் EAD ஐப் பெற்றது. ECL ஐக் கணிப்பிடும் போது, முறைமை உருவாக்கிய PD, LGD மற்றும் EAD ஆகியன பயன்படுத்தப்படுகின்றன. எனினும், EFA கணிப்பீட்டு மாதிரிக்காக மேற்கொள்ளப்பட்ட சமீபத்திய மாற்றமாக ECL ஐ வரவழைக்கப் பயன்படுத்தப்படும் EFA ஐக் கணிப்பிடும் போது கைமுறையான தலையீடு பயன்படுத்தப்படுகிறது. EFA மாதிரியில் இடம்பெற்ற சமீபத்திய மாற்றங்களை இணைத்து, முறைமையில் EFA செயன்முறையை ஒன்றிணைப்பதற்கு விற்பனையாளருடன் வங்கி பணியாற்றி வருகிறது. | எந்தவொரு கைமுறையான தலையீடும் இல்லாமல் முறைமை மூலம் ECL கணிப்பீடுகளைச் செய்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சில முறைமை தோல்விகள் காரணமாக பொது பேரேட்டு மீதிக்கும் வங்கி வர்த்தக நிதி முறைமையின் நிலுவை மீதிகளிற்கும் இடையே ரூபா 397,565,454 வேறுபாடு அறிக்கையிடப்பட்டது.. 2021 ஆம் நிதியாண்டில் இது தொடர்பாக முழுமையான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | ரூபா 397,565,454 வேறுபாடு CIA இன் பரிந்துரையுடன் 2022.01.31 ஆம் திகதிய குறிப்பாணை மூலம் சொத்துக்கள் மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழுவிற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது, மேலும் IS கணக்காய்விலிருந்து மதிப்பாய்வு செய்வதற்கு அறிவுறுத்தப்பட்டது.<br><br>உள்ளக கணக்காய்வு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது, மேலும், தீர்ப்பனவு செய்யப்படாத வட்டியை மாற்றுவதற்கு அங்கீகாரம் கோரி ALCO இற்கு புதிய விஞ்ஞாபனம் | உரிய திகதிகளில் தேவையான திருத்தங்களைச் செய்து, பொதுப் பேரேடு மற்றும் துணை முறைமைகளுக்கு இடையே உள்ள மீதிகளை அடிக்கடி கணக்கிணக்கம் செய்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

சமர்ப்பிக்கப்படும்.
இலக்கு திகதி:- 2022.12.31

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 செலுத்த வேண்டியவைகள்**

**கணக்காய்வு விடயம்**

---

(i) ஏனைய பொறுப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட பின்வரும் கணக்குகள் கணிசமான காலப்பகுதியில் இருந்து வரும் நீண்டகால நிலுவை மீதிகளை கொண்டுள்ளன. நீண்ட காலமாக நிலுவையாக உள்ள மீதிகளை தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிரக்கவில்லை. அத்தகைய மீதிகளின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| GL கணக்கின் பெயர் | GL இல. | தொகை (ரூபா) | குறிப்புக்கள் |
|---|---|---|---|
| கொடுப்பனவு கட்டளை | 21818006 | 1,427,646,565 | மீதியின் வயது பகுப்பாய்வு.<br>1 வருடத்திற்கும் குறைவானது (ரூபா): 1,039,529,832<br>1 முதல் 5 ஆண்டுகள் வரையானது (ரூபா): 381,861,269<br>5 ஆண்டுகளுக்கு மேற்பட்டது (ரூபா): 6,255,464 |
| உரிமை கோரப்படாத மீதிகள் கணக்கு | 21818009 | 653,410,057 | 8 வருட காலத்திலிருந்து இந்த கணக்கின் கீழ் இந்த மீதி வருகிறது. |
| அறவீடு தொடர்பான கட்டண உறுதிச்சீட்டு பெறுவனவுகள் | 22310082 | 125,907,701 | Age analysis of the Balance.<br>5 ஆண்டுகளுக்கு மேற்பட்டது (ரூபா): 65,486,051<br>2 - 5 ஆண்டுகள் (ரூபா): 34,448,572.92<br>1 ஆண்டு (ரூபா): 25,973,077.56 |
| போலியான காசோலை மற்றும் மோசடிகள் தொடர்பான ஒதுக்கீடு | 22310122 | 678,830,827 | இந்த மீதி ஐந்தாண்டு காலத்தை தாண்டியுள்ளது. |
| **மொத்தம்** | | **2,885,795,150** | |

**முகாமைத்துவ கருத்துரை**

---

வங்கி நீண்டகால நிலுவை உரப்படிகளை கணக்கிணக்கம் செய்து தீர்ப்பதற்கான செயன்முறையை நிறுவியுள்ளது. எனினும், பல்வேறு காரணங்களுக்காக சில உருப்படிகள் பேணப்பட வேண்டியுள்ளதுடன் நீண்டகால நிலுவை உருப்படிகளை தீர்ப்பதற்கு உரிய வணிக பிரிவுகளுக்கு அறிவுறுத்தப்படும்.

**கொடுப்பனவு கட்டளை**

உரிய வணிகப் பிரிவுகள் அவர்களது உரிய கிரய நிலையங்களில் நீண்டகால நிலுவை உருப்படிகளை தீர்ப்பதற்கு தொடர்ச்சியாக அறிவுறுத்துகின்றன.

**உரிமை கோரப்படாத மீதிகள் கணக்கு**

இக் கொடுக்கல்வாங்கல் FARAB கம்பனி லிமிட்டட்/ ஈரானின் நவ்ரிரன் இன்ரறேட் கம்பனியுடன் தொடர்புடையதாகும். ஈரான் அரசுடன் ஐக்கிய நாடுகள்

**பரிந்துரை**

---

ஏனைய பொறுப்புக் கணக்குகளின் நீண்டகால நிலுவை மீதிகளை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

சபையின் தடைகள் விதிக்கப்பட்டதால், இந்த ஒழுங்குமுறைக்கு இணங்க அந்தந்த சொத்துக்கள் முடக்கப்பட்டன. அத்தகைய கம்பனிகளுக்குச் சொந்தமான கணக்குகளின் மீதி, அத்தகைய தடைகள் நீக்கப்படும் வரை அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய நிதிகளை அகற்றும் முறையை அடையும் வரை வங்கியிடம் இருக்கும். ஐ.நா.வின் தடைகளின் பிரகாரம் இந்த நிதியை வழங்கவோ, மாற்றவோ அல்லது ஒதுக்கீடு செய்யவோ வங்கியால் முடியாது. கோரப்படாத மீதி தொடர்பான கொள்கையை வங்கி அங்கீகரித்துள்ளதுடன் அங்கீகரிக்கப்பட்ட கொள்கை / CBSL வழிகாட்டலின் பிரகாரம் CBSL இற்கு உரிமை கோரப்படாத மீதியை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**அறவீடு தொடர்பாக அனுப்பப்பட்ட கட்டண உறுதிச்சீட்டு பெறுவனவுகள்:-**

(i) <u>5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை மீதி</u>

சஹானா அறக்கட்டளை மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான நீதிமன்ற

வழக்குகளின் காரணமாக இலங்கை ரூபா 64 மில்லியன் நிலுவையாக உள்ளது.*

(ii) <u>2-5 ஆண்டுகளின் போதான நிலுவை</u>
மாலத்தீவு POS வணிகம், மாலத்தீவில் ஐ.அ.டொலர் 97000 தொகையான நீதிமன்ற வழக்கை கொண்டுள்ளது.*

(iii) <u>இந்த ஆண்டினுள் காணப்படும் நிலுவை</u>
கட்டணம் திரும்ப செலுத்தும் காலம் (120 நாட்களுக்குள்) முடிவடைந்ததும் வணிகங்களிற்கு கொடுப்பனவுகள் தீர்ப்பனவு செய்யப்படும்.*

*மேலும், வணிகத்தின் கணக்குகளை மூடுதல், வணிகங்களை முடிவுறுத்தல் போன்றவற்றின் காரணமாக சில நீண்டகால நிலுவை தொகைகள் உள்ளன, அங்கு எங்களிடம் கடன் அறிவுறுத்தல்கள் காணப்படவில்லை.

**போலியான காசோலை மற்றும் மோசடிகள் தொடர்பான ஒதுக்கம்**
ஒதுக்கக் கணக்கில் உள்ள ஏற்பாட்டை குறைப்பதற்கு தொடர்ச்சியான கண்காணிப்பு

செயன்முறை மேற்கொள்ளப்படுகிறது . ஆனால் நீதிமன்ற வழக்குகள் நிலுவையாக உள்ளதால் சில உருப்படிகளை திரும்பப் பெற முடியாது.

### 1.6.2 முற்பணங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கடந்த ஐந்து ஆண்டு காலப்பகுதியில் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு (SOEs) சொந்தமான கடன்கள் மற்றும் முற்பணங்களின் மொத்த நிலுவை மீதி கணிசமாக அதிகரித்துள்ளது. மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்விலிருந்து பின்வரும் அவதானிப்புகள் வெளிப்படுத்தப்பட்டன.<br><br>• 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக உள்ள அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் (SOEs) மொத்த நிலுவை மீதி மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களில் 30.24 சதவீதமாகவும், வங்கியின் மொத்த சொத்துக்களில் 18.90 சதவீதமாகவும் உள்ளது. இது 2021 ஆம் ஆண்டில், மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்களில் 44.31 சதவீதமாகவும் வங்கியின் மொத்த சொத்துக்களில் 30.02 சதவீதமாகவும் அதிகரித்தது, இது முறையே 47 சதவீதம் மற்றும் 29 சதவீதம் ஆன விரைவான அதிகரிப்பைக் காட்டுகிறது.<br><br>• 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியின் மொத்த சொத்துக்கள் ரூபா 3,803 பில்லியனாக அதிகரித்த போதிலும், அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு (SOEs) வழங்கப்பட்ட கடன் மற்றும் முற்பணத்தை 30.02 சதவீதம் பிரதிநிதித்துவப்படுத்தியது.<br><br>• 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு (SOEs) சொந்தமான Off balance sheet மீதிகள் (LCs, ஏற்றுக்கொள்ளல் மற்றும் வங்கி உத்தரவாதங்கள்) ரூபா 197,087 மில்லியனாக இருந்ததுடன் மேற்கூறிய Off balance sheet பெறுமதி உள்ளடங்கிய அரசுக்குச் சொந்தமான | கருத்துரைகள் குறித்துக்கொள்ளப்பட்டன<br>• 2022-2024 இற்கான கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் வங்கியின் மொத்த போர்ட்போலியோவில் (portfolio) அராங்க மற்றும் SOEs இன் வெளிப்பாட்டை 30 சதவீதமாக மட்டுப்படுத்தி தனியார் துறையின் வெளிப்பாட்டை 70 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கு வங்கி திட்டமிட்டுள்ளது,<br>• எனினும், கொவிட் தொற்றுநோய்க்குப் பின்னர் நிலவிய பொருளாதார ஸ்திரமின்மை காரணமாக தனியார் துறை நிறுவனங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டதுடன் வங்கியால் எதிர்பார்க்கப்பட்ட தனியார் துறைக்கான வெளிப்பாட்டு அளவுகளை அடைய முடியவில்லை, குறிப்பாக பிரதான வாடிக்கையாளர்கள் GOSL மற்றும் SOEs இன் வாடிக்கையாளர்களாக உள்ளதுடன் (அதாவது RDA, UDA) தனியார் துறைக்கு தாக்கங்கள் உடனடியாக பரவுகின்றது.<br>• அதே நேரத்தில் ஒரு அரசுக்குச் சொந்தமான வங்கியாக இருப்பதால், சமூகப் பொறுப்பு மற்றும் தேசிய நலன் காரணமாக, ஒழுங்குமுறை | 2022-2024 இற்கான கூட்டிணைந்த திட்டத்தை கடைப்பிடித்து இலக்கின் பிரகாரம் அரசாங்கம் மற்றும் SOEs இன் வெளிப்பாடு குறைவடைவதை உறுதிப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

நிறுவனங்களின் (SOEs) மொத்த வெளிப்பாடு ரூபா 2,385,602 மில்லியனாக பதிவு செய்யப்பட்டதுடன் இது வங்கியின் மொத்த சொத்துக்களில் 62.72 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது.

மற்றும் நியதிச்சட்ட தேவைகளிற்கு இணங்க, BOC அரசாங்கத்திற்கான அதனது போர்ட்போலியோவை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

- எவ்வாறாயினும், விலையிடல் மூலோபாயம் / மறுசீரமைப்பு முயற்சிகளில் செய்யப்பட்ட மாற்றங்கள், சம்பந்தப்பட்ட SOEs முறிவை அடைந்துள்ளன / இலாபத்தைப் பதிவு செய்யத் தொடங்கின, அதன் மூலம் காசுப்பாய்ச்சல்களில் முன்னேற்றங்கள் அவதானிக்கப்படுகின்றன, மேலும் அவை ஏற்கனவே உள்ள வசதிகளின் நலனுக்கு சேவை செய்ய முடிந்தது.
- அரசாங்கம் மற்றும் SOEs இற்கு தற்போதுள்ள மற்றும் சாத்தியமான வெளிப்பாட்டைக் குறைப்பதற்கு பின்வரும் மூலோபாயங்கள் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ளன.

(i) DST மாற்றப்பட்ட பிணைமுறியிலிருந்து சந்தை விலைவிகிதத்தில் ஆரம்பத்தில் ரூபா 100 பில்லியன் பெறுமதியான திறைசேரி பிணைமுறிகளை கொள்வனவு செய்வதற்கும், மீள வழங்குவதற்கும் அரசாங்க திறைசேரியிடம் கோரப்பட்டது. இது குறித்த பிணைமுறியின் சந்தை பெறுமதியை ரூபா 53 பில்லியனால் அதிகரிப்பதற்கு வங்கிக்கு உதவும்.

(ii) DST இற்கான வெளிப்பாட்டைக் குறைப்பதற்கு காலக்கெடுவுக்கான மூலோபாயங்கள் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளன, மேலும் வரம்பு ரூபா 40.0 பில்லியன் வரை குறைக்கப்பட்டுள்ளது. இது திறைசேரி கணக்கை மேலும் அதிகமாக எடுப்பதில் திரவத்தன்மை அழுத்தத்தை எளிதாக்குவதற்கு வழிவகுக்கும்.

(iii) 2022.08.22 இல் திறைசேரி செயலாளரிடம் ரூபா 100 பில்லியன் பெறுமதியான DST மாற்றப்பட்ட திறைசேரி பிணைமுறிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கு வங்கி ஏற்கனவே கோரிக்கை விடுத்துள்ளது.

(iv) 2022.08.30 இல் அவர்களின் அவதானிப்புக்கள்/ பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்காக பொதுத் துறைத் திணைக்களத்திற்கு வங்கியின் கோரிக்கையை திறைசேரி அனுப்பியுள்ளதுடன் தீர்மானம் இன்னும் நிலுவையாக உள்ளது.

(v) SOEs இற்கு சொந்தமான செயற்பாடற்ற கடன்களுக்குப் பதிலாக குறுங்கால அரச, பிணைப்பத்திரங்களை வழங்குவதற்கு அரசாங்க திறைசேரியுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. RDA மற்றும் NWS&DB இற்காக வங்கிக்கு ஏற்கனவே ரூபா 8.5 பில்லியன் பெறுமதியான 3 ஆண்டு திறைசேரி பிணைமுறிகள் வழங்கப்பட்டன.

(vi) SOEs இன் வெளிப்பாட்டைக் கண்காணிப்பதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் பின்வரும் முறையில் தேவையான வரம்புகள் (appetite limits) ஏற்படுத்தப்பட்டன.

(அ) அனைத்து SOEs இற்கும் தேவையான வரம்பு 800 பில்லியன்

(ஆ) குறிப்பிட்ட இடர் தேவைப்பாட்டு வரம்புகள்

| வாடிக்கையாளர் பெயர் | இடர் தேவைப்பாட்டு வரம்பு (ரூபா. பில்) |
|---|---|
| வீதி அபிவிருத்தி அதிகாரசபை | 175.0 |

| | |
|---|---|
| வீதி அபிவிருத்தி அதிகாரசபை – விலைச்சிட்டை கழிவிடல் மற்றும் விலைப்பட்டியல் கழிவிடலிற்கான பயனாளியாக | 15.0 |
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலரமப்பு சபை | 50.0 |
| இலங்கை மின்சார சபை | 20.0 |
| நெல் சந்தைப்படுத்தல் சபை | 15.0 |
| நகர அபிவிருத்தி அதிகாரசபை | 10.0 |

(vii) புதிய வசதிகளை வழங்காமல் இருப்பதற்கும், ஏற்கனவே வழங்கப்பட்ட உள்நோக்கக் கடிதத்தை இரத்து செய்வதற்கும், பின்வரும் SOEs இன் அங்கீகரிக்கப்பட்ட வரம்புகளைக் குறைப்பதற்கும் பணிப்பாளர் சபையிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

- தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை
- வீதி அபிவிருத்தி அதிகாரசபை
- நகர அபிவிருத்தி அதிகாரசபை
- நெல் சந்தைப்படுத்தல் சபை

(viii) அதற்கேற்ப மதிப்பீட்டு முறைமையில் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ix) SOEs மற்றும் GOSL இன் ஒவ்வொரு புதிய கடன் முன்மொழிவிலும் மூலதனப் போதுமை மற்றும் திரவத்தன்மை தொடர்பான நிகழ்நேர மதிப்பீடு மேற்கொள்ளப்படுகிறதுடன் விஞ்ஞாபனத்தில் அத்தகைய தேவைப்பாடு

கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

(x) அரசாங்கம் மற்றும் SOEள இற்கு கடன் வழங்குதல் மற்றும் நிதியுதவி ஆகியவற்றில் பொருத்தமான தேவைப்பாட்டு வரம்பை அமுல்ப்படுத்துவதற்கு முன்மொழிதல்.

(xi) CBSL ஆல் வழிகாட்டப்பட்டவாறு வங்கி மேற்பார்வையின் பிரகாரம் GOSL மற்றும் SOEs இற்கு வங்கி கடன் வழங்குவதைக் குறைத்துள்ளதுடன் அத்தகைய கடன் வழங்குவது பணிப்பாளர் சபையின் முன் அங்கீகாரத்துடன் இருக்கும்.

(xii) வங்கி தற்போது பொருண்மையான கடப்பாடுகளைத் தீர்ப்பதன் மூலம் கடுமையான வெளிநாட்டு நாணய திரவத்தன்மை தொடர்பான சிக்கல்களைத் தீர்த்துள்ளது.

(xiii) சில FCY கடப்பாடுகளிற்கு GOSL சலுகையளித்திருக்காத போதிலும் நாளாந்த அடிப்படையில் வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட FCY உட்பாய்ச்சல்களை பயன்படுத்தி அத்தகைய பொருண்மையான கடப்பாடுகளை வங்கி தீர்த்துள்ளது.

(xiv) அதிகரித்து வரும் போக்குடன் தற்போதைய உட்பாய்ச்சல் நிலை தொடர்ந்து இருந்தால், திரட்டப்பட்ட முக்கிய பொறுப்புக்கள் ஏற்கனவே தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளதால் உருவாக்கப்பட்ட LCs இல் இருந்து எழும் பொறுப்புக்களை ஸ்தம்பித அடிப்படையில் மேற்கொள்வதற்கு எந்த தடையையும் வங்கி எதிர்பார்க்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (ii) | திறைசேரியின் பிரதிச் செயலாளர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை அரசாங்கம், ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, இலங்கை மின்சார சபை, ஓய்வூதியத் திணைக்களம், இலங்கை அரச மருந்துக் கூட்டுத்தாபனம் மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபை என்பன 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதல் 10 அரசுக்கு சொந்தமான நிறுவனங்களாக (SOEs) இனங்காணப்பட்டது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதல் 10 அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் (SOEs) மொத்த நிலுவை மீதிகள் ரூபா 1,085,738 மில்லியன் மூலதன நிலுவையையும் ரூபா 15,349 மில்லியன் வட்டி நிலுவையையும் உள்ளடக்கிய ரூபா 1,101,087 மில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளன. இது அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் (SOEs) கடன்கள் மற்றும் முற்பணங்களின் மொத்த நிலுவை மீதியில் 96.44 சதவீதம் ஆகும். எனவே, முக்கிய SOE வாடிக்கையாளர்கள் மீது ஒரு பெரிய சார்ந்திருக்கும் தன்மை அவதானிக்கப்பட்டது. | கருத்துரைகள் குறித்துக்கொள்ளப்பட்டன.<br>அரசுக்குச் சொந்தமான வங்கியாக இருப்பதால், ஒழுங்குமுறை மற்றும் நியதிச்சட்ட தேவைகளுக்கு இணங்க, சமூகப் பொறுப்பு மற்றும் தேசிய நலன் காரணமாக, அரசாங்க மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு வசதிகளை விரிவுபடுத்துவதற்கு BOC கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. | 2022-2024 இற்கான கூட்டிணைந்த திட்டத்தை கடைப்பிடித்து இலக்கின் பிரகாரம் அரசாங்கம் மற்றும் SOEs இன் வெளிப்பாடு குறைவடைவதை உறுதிப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (iii) | DST மேலதிகப்பற்று சமீபத்தில் அதிகரித்து வரும் OD மீதியைக் கட்டுப்படுத்த பல சந்தர்ப்பங்களில் மறுசீரமைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2020 முதல் 2021 வரையிலான இரண்டு ஆண்டுகளில் ரூபா 527 பில்லியன் பெறுமதியான மேலதிகப்பற்று மீதி திறைசேரி பிணைமுறிகளாக மாற்றப்பட்டுள்ளது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.<br>• இந்த மறுசீரமைப்பு காரணமாக, DST இற்கு நீடிக்கப்பட்ட OD வசதிகளை அறவிடுதல் 1 - 10 ஆண்டு காலப்பகுதியால் பிற்போடப்படுகிறது. இந்த மேலதிகப்பற்றுக்கள் முக்கியமாக குறுகிய கால கடன் மூலங்கள் மூலம் நிதியளிக்கப்படுகின்றன, மேலும் இது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் முதிர்வு சுயவிவரத்தில் இடைவெளியை உருவாக்கும்.<br>• DST இன் தீர்ப்பனவின் போது இடம்பெறுகின்ற தற்போதைய போர்ட்போலியோவின் சராசரி பிணைமுறி விகிதம் சராசரியாக 10 சதவீதமாக உள்ளதுடன் அத்தகைய பிணைமுறிகளின் சராசரி சந்தை விகிதம் கிட்டத்தட்ட 15 சதவீதமாக உள்ளது. எனவே DST போர்ட்போலியோவின் குறைந்த பிணைமுறி விகிதம் காரணமாக வங்கி நட்டத்தைச் சந்திக்கிறது.<br>• 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு DST | DST மேலதிகப்பற்றின் தற்போதைய மற்றும் சாத்தியமான வெளிப்பாட்டை முகாமை செய்யக்கூடிய நிலைக்கு குறைப்பதற்கு பின்வரும் மூலோபாயங்கள் தற்போது அமுல்ப்படுத்தப்பட்டுள்ளன.<br><br>1.6.2 ஆம் பந்தியின் (i) ஆம் பிரிவிற்கு கொடுக்கப்பட்ட (i), (ii) மற்றும் (iii) ஆம் பதில்களைப் பார்க்கவும்<br><br>2022 மே முதல் DST OD மீதியை திறைசேரி பிணைமுறிகளாக மாற்றுவதை வங்கி நிறுத்தியுள்ளது.<br><br>CBSL வங்கி மேற்பார்வை மூலம் வழிகாட்டப்பட்டவாறு வங்கி GOSL மற்றும் SOEs இற்கு கடன் வழங்குவதைக் குறைத்துள்ளதுடன் அத்தகைய கடன் வழங்குதல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் இருக்கும். | DST மேலதிகப்பற்றை முகாமைசெய்யக்கூடிய அளவில் பேணுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

கணக்கின் மேலதிகப்பற்று மீதி ரூபா 430,148 மில்லியனாக உள்ளதுடன் 2020 முதல் 2021 வரையிலான காலப்பகுதியில் அரசாங்கத்தின் வெளிப்பாட்டின் தீர்ப்பனவுக்காக வழங்கப்பட்டிருந்த திறைசேரி பிணைமுறிகளின் புத்தக பெறுமதி ரூபா 513,000 மில்லியன் ஆகும்.

சிரேஷ்ட பிரஜைகள் வைப்பு மற்றும் தொழில்நிறுவன இலங்கை கடன் திட்டத்திற்காக அரசாங்க திறைசேரியிடமிருந்து பெற வேண்டிய வட்டி மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ரூபா 8,025 மில்லியன் பெறுமதியான திறைசேரி பிணைமுறிகள் விடுவிக்கப்பட்டுள்ளமை மேலும் அவதானிக்கப்பட்டது.

மொத்த GOSL வெளிப்பாடு ரூபா 1,057,226 மில்லியன்ாக உள்ளதுடன் இது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியின் மொத்த சொத்துக்களில் 27.80 சதவீதத்தை பிரதிபலிக்கிறது. விபரங்கள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

| விபரம் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா'மில்லியன் |
|---|---|
| DST OD மீதி | 430,148 |
| GOSL கடன் | 106,054 |
| DST மேலதிகப்பற்று மீதி தீர்ப்பனவின் போது திறைசேரி பிணைமுறியின் புத்தக பெறுமதி | 513,000 |
| சிரேஷ்ட பிரஜைகள் வைப்புக்கள் மற்றும் தொழில்நிறுவன இலங்கை கடன் திட்டத்திற்காக அரசாங்க திறைசேரியிடமிருந்து பெற வேண்டிய வட்டியை தீர்ப்பனவு செய்வதற்கு விடுவிக்கப்பட்ட திறைசேரி பிணைமுறி | 8,025 |
| மொத்த GOSL வெளிப்பாடு | 1,057,227 |
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியின் மொத்த சொத்துக்கள் | 3,803,284 |

| | |
|---|---|
| வங்கியின் மொத்த சொத்துக்களின் % ஆக மொத்த GOSL வெளிப்பாடு | 27.80% |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மூலதனம் மற்றும் வட்டியை திருப்பிச் செலுத்தாத போதிலும் பல நட்டமீட்டும் SOEs இற்கு வழங்கப்பட்ட கடன்களை NPL என வகைப்படுத்துவதை வங்கி தடுத்துள்ளது. SLFRS 09 தொடர்பான மத்திய வங்கி வழிகாட்டலின் ஊடாக வழிகாட்டப்பட்டவாறு எத்தனை முறை மறுசீரமைக்கப்பட்டது என்பதை கருத்தில் கொண்டு ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸிற்கு வழங்கப்பட்ட 26 கடன்களும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு வழங்கப்பட்ட 16 கடன்களும் சரியாக வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் உண்மையான நட்டக்கழிவிடப்பட்ட கடன்கள் பதிவு செய்யப்பட்ட தொகையை விட அதிகமாக இருக்கும். | **<u>ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ்</u>**<br>கொவிட் 19 மற்றும் பொருளாதார நெருக்கடியால் SLAL இன் வணிகம் கடுமையாக பாதிக்கப்பட்டது. பெரும்பாலான முன்பதிவுகள் இரத்து செய்யப்பட்டதால் வங்கிக்கு காசு உட்பாய்ச்சல் குறைவடைந்துள்ளது. எனினும், SLAL இற்கும் வங்கிக்கும் இடையில் தொடர்ச்சியான கடிதப் பரிமாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. SLAL வசதிகளின் பெரும்பகுதி அரசாங்க உத்தரவாதங்கள் மற்றும் அரசின் உரிமையாளராக GOSL வழங்கும் வசதிக் கடிதத்திற்கு எதிராக பாதுகாக்கப்பட்டுள்ளதுடன் தேசிய நலன் மற்றும் அரசாங்க பிணையின் ஏற்றுக்கொள்ளும் தன்மை காரணமாக அத்தகைய ஏற்பாட்டை மதிக்க வேண்டிய கட்டாயத்தில் வங்கி உள்ளது.<br><br>ஏற்றுக்கொள்ளக்கூடிய காசுப்பாய்ச்சல் திட்டத்துடன் வசதிகளை மீள்கட்டமைத்தல் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br><br>SLAL ஐ.அ.டொலர் 1.0 மில்லியன் காலக் கடனை 2022.06.22 இல் முதிர்ச்சியடையும் போது செலுத்தியதுடன் ஐ.அ.டொலர் 450.0 மில்லியன் கடன் வசதியை 2022.10.06 இல் செலுத்தியது. SLAL அதன் ஐ.அ.டொலர் 10.0 மில்லியன் SWAP ஏற்பாட்டையும் 2022.10.06 இல் முதிர்ச்சியடையும் போது தீர்த்தது.<br><br>வங்கி வசதிகளுக்கான வட்டிக் கொடுப்பனவுகள் உரிய நேரத்தில் வழங்கப்பட்டுள்ளன.<br><br>SLAL நட்டக்கழிவு ஏற்பாட்டு நோக்கத்திற்காக கட்டம் 2 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் | ஒரு குறிப்பிட்ட வாடிக்கையாளருக்கு போதுமான ஏற்பாடுகளை கணிப்பிடுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

2022.09.30 இல் இலங்கை ரூபா 2.7 பில்லியனை வழங்கியுள்ளது.

**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை**

2019.12.31 இல் உள்ளவாறு நிலுவையாக உள்ள 16 கடன்களின் மூலதனம், இரண்டு வருட சலுகைக் காலத்துடன் மறுசீரமைக்கப்பட்டுள்ளது, 2022 திசெம்பர் முதல் ஒவ்வொரு கடனின் மிகுதி காலத்தின்போதும், முதலில் அங்கீகரிக்கப்பட்ட மொத்த தவணை மற்றும் ஏனைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நீடிக்காமல் ஆண்டுக்கு இருமுறை மூலதனம் செலுத்தப்பட வேண்டும். ஏற்பாட்டின் பிரகாரம் NWSDB வட்டியை 2021.12.30 வரை திருத்தம் செய்துள்ளது. எவ்வாறாயினும், NWSDB அல்லது பொது திறைசேரியில் இருந்து எந்தவொரு சாதகமான பதிலையும் பெற்றுக்கொள்ளாமல் 2022 யூன் முதல் ரூபா 2.36 பில்லியன் கடந்த அரையாண்டு வட்டி கொடுப்பனவு தீர்ப்பனவு செய்யப்படாதிருந்தது. NWSDB 2022.09.01 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் 2022.06.30 இல் 2022.12.31 வரை பெறப்பட வேண்டிய ரூபா 2.36 பில்லியன் அரையாண்டு வட்டிக் கொடுப்பனவை பிற்போடுமாறு கோரியிருந்தது.

இதன் மூலம், 2022 திசெம்பர் முதல் வட்டியுடன் சேர்த்து மூலதன கொடுப்பனவும் தொடங்கும், 2022 திசெம்பரில் NWSDB கடன் பொறுப்பு ரூபா 10.0 பில்லியன் வரை அதிகரிக்கும், இது இந்த நேரத்தில் NWSDB க்கு கடினமாகத் தெரிகிறது

இந்தச் சூழ்நிலைகளில், NWSDB 2022 திசெம்பர் தவணைப்பணம் செலுத்தாத அபாயத்தைக் கருத்தில் கொண்டு, 2022.09.30 இல் முடிவடைந்த காலாண்டில், OIC 60/2021 இன் பிரகாரம் நட்டக்கழிவு ஏற்பாடு தொடர்பாக கட்டம் II இன்

கீழ் NWSDB கடன் போர்ட்போலியோ வகைப்படுத்தப்பட்டது.

(v) கடந்த 5 வருட காலப்பகுதியில் முதல் 10 செயற்பாடற்ற வாடிக்கையாளர்கள் (NPA) பகுப்பாய்வு செய்யப்பட்டதுடன் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்விலிருந்து பின்வரும் அவதானிப்புக்கள் வெளிப்படுத்தப்பட்டன.

- 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முதல் 10 செயற்பாடற்ற வாடிக்கையாளர்களின் மொத்த மீதி ரூபா 21,455.50 மில்லியனாக இருந்ததுடன் இது அத் திகதியில் உள்ளவாறான வங்கியின் மொத்தச் செயற்பாடற்ற மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களில் 18.50 சதவீதத்தைக் குறிக்கிறது.
- 2017 ஆம் நிதியாண்டுடன் ஒப்பிடும் போது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்தச் செயற்பாடற்ற முதல் 10 வாடிக்கையாளர் மீதி 181.8 சதவீதம் அல்லது ரூபா 13,843.06 மில்லியனால் அதிகரித்துள்ளது. பின்வரும் அட்டவணையில் மொத்தச் செயற்பாடற்ற முதல் 10 வாடிக்கையாளர் மீதிகளின் இயக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

| விபரம் | 2017 | 2018 | 2019 | 2020 | 021 |
|---|---|---|---|---|---|
| மொத்த முதல் 10 செயற்பாடற்ற வாடிக்கையாளர் மீதி | 7,612.44 | 12,440.50 | 14,309 | 16,257.55 | 21,455.50 |
| முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது முதல் | - | 4,828.06 | 1,868.50 | 1,948.55 | 5,197.95 |

உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை, தவணைப்பணம் காலந்தாழ்த்தி செலுத்துதல் காலம் முடிவடைதல், வட்டி விகித உயர்வு மற்றும் அரசாங்க கொள்கைத் தீர்மானமொன்றாக இடைநிறுத்தப்பட்ட அறவீடு / சட்ட நடவடிக்கைகளுடன் கடன் பெற்றவர்கள் எதிர்கொள்ளும் பொருளாதார வீழ்ச்சி தொடர்பான தவிர்க்க முடியாத சிக்கல்கள் காரணமாக செயற்பாடற்ற கடன் வசதிகளில் (NPCF) வளர்ச்சி ஏற்படுகிறது.

**<u>கே டி ஈபேர்ட் அன்ட் சன்ஸ் ஹோல்டிங் (பிறைவேட்) லிமிட்டட்.</u>**
வங்கியிடம் ஏற்கனவே ஈடுவைக்கப்பட்டுள்ள சொத்துகளுக்கு புதிய மதிப்பீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு வங்கி ஏற்பாடு செய்துள்ளது. (FSV 852 மில்., MV 943.90 மில்.)

மேலும் கம்பனி பெற்றுக்கொண்ட வசதிகளுக்காக பொறி மற்றும் இயந்திரங்கள், வாகனங்களை ஈடுவைத்துள்ளது. விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| மதிப்பீட்டு அறிக்கை திகதி | வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின் இல. | சந்தை பெறுமதி (MV) ரூபா. மில். | கட்டாய விற்பனை பெறுமதி (FSV) ரூபா. மில். |
|---|---|---|---|
| 08.01.2021 | 79 | 282,445,000 | 214,375,755 |
| 31.05.2021 | 295 | 761,613,750 | 642,294263 |
| 31.05.20 | 119 | 1559,735,804 | 1239,989,964 |

ஒரு குறிப்பிட்ட வாடிக்கையாளருக்கு கடன்களை வழங்குவதற்கு முன்னர் வங்கியால் திருப்திகரமான வாடிக்கையாளர் மதிப்பீடுகள் செய்யப்பட்டிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 NPL மீதியின் அதிகரிப்பு (ரூபா’ மில்லியன்) | | | | | |
| முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது முதல் 10 NPL மீதியின் % அதிகரிப்பு (%) | - | 63.4% | 15.0% | 13.6% | 32.0% |

- வங்கியின் NPA வாடிக்கையாளர் பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் இருக்கும் பல வாடிக்கையாளர்கள் உள்ளனர். விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| **வாடிக்கையாளர் பெயர்** | **2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை (ரூபா’மில்.)** | **குறிப்புக்கள்** |
|---|---|---|
| கே டி ஈபேர்ட் & சன்ஸ் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 3,538.81 | கடந்த 4 ஆண்டுகளில் (2018 முதல் 2021 வரை) உயர் NPA வாடிக்கையாளராக தரவரிசைப்படுத்த |
| | 21 | | |

மேலும், மேற்படி கம்பனி பல வீதி செயற்திட்டங்களில் ஈடுபட்டுள்ளது. 2022.02.28 இல் உள்ளவாறு கைவசம் உள்ள மொத்த செயற்திட்டங்கள் ரூபா 10.3 பில்லியனாகும். இந்தச் சூழ்நிலையில் மொத்த சான்றுபடுத்தப்பட்ட கொடுப்பனவு ரூபா 641.0 மில்லியன் என RDA 2022.07.05 இல் அவர்களின் கடிதத்தை உறுதிப்படுத்தியுள்ளது.

மேற்கூறியவற்றிற்கு மேலதிகமாக வங்கி 2022.09.30 இல் உள்ளவாறு ரூபா 4,581.3 மில்லியன் நட்டக்கழிவு ஏற்பாட்டை வழங்கியுள்ளது.

**கடுவெல ஹோல்டிங்ஸ்**

கடந்த ஐந்து ஆண்டுகளில் (2017 - 2021) உயர் NPL வாடிக்கையாளர் பட்டியலில் தொடர்ந்து நீடிக்கிறது.

இலங்கை வங்கி ரூபா 450.0 மில்லியன் அடமானக் கடன், ரூபா 100.0 மில்லியன் நடுத்தர கால கடன், ரூபா 426.26 மில்லியன் LC உண்டியல்கள் மற்றும் ரூபா 134.09 மில்லியன் மேலதிகப்பற்று என்பவற்றிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது.

**ருஹுணு டெவலப்மென்ட் கென்ட்ராக்டர்ஸ் & எஞ்சினியரிங் (பிறைவேட்) லிமிட்டட்**

வணிக மறுமலர்ச்சி மற்றும் மறுமலர்ச்சி மூலோபாயத்தின் கீழ், ஏற்கனவே உள்ள வசதிகளை மீளப்பட்டியலிடுவதன் மூலம் கம்பனியை மதிப்பாய்வு செய்வதற்கு வங்கி கருத்தில் கொண்டுள்ளதுடன் கம்பனிக்கு புதிய தொழிற்படு மூலதன வசதிகளை வழங்கியுள்ளது. கம்பனி RDA வழங்கும் நிர்மாண செயற்திட்டங்களில் முழுமையாக ஈடுபட்டுள்ளது. மொத்த காசுப்பாய்ச்சலை வங்கிக்கு அனுப்புவதற்கும், காலப்போக்கில்

| | | |
|---|---|---|
| | | ப்பட்டுள்ளது |
| கடுவெல ஹோல்டிங்ஸ் | 1,105.97 | கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் உயர் NPL வாடிக்கையாளர் பட்டியலில் தொடர்ந்து நீடிக்கிறது. (2017 - 2021) |
| ருஹுணு டெவலப்மென்ட் கென்ட்ராக்டர்ஸ் & எஞ்சினியரிங் (பிறைவேட்) லிமிட்டட் | 1,551.92 | கடந்த மூன்று வருடங்களில் உயர் NPL வாடிக்கையாளர் பட்டியலில் தொடர்ந்து நீடிக்கிறது. (2019 - 2021) |
| அனுடன் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 1,286.38 | |
| ஆர் என் கென்ஸ்ட்ரக்ஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 1,266.77 | |
| என் பீ பூட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 1, 253.48 | |

அனைத்து வசதிகளையும் அறவிடுவதற்கும் வங்கி எதிர்பார்க்கிறது.

அதன் பிரகாரம் BRR அலகு 2021 செப்தெம்பரில் மறுமலர்ச்சி திட்டத்தை அமுல்ப்படுத்தியுள்ளது. மறுமலர்ச்சிக்குப் பின்னர் கம்பனியின் செயலாற்றல் பின்வருமாறு.

- BOC இற்கான மொத்த காசுப்பாய்ச்சல் ரூபா 2391.0 மில்லியன்
- அறவிடப்பட்ட மூலதனம்: ரூபா 627.0 மில்லியன்* (*சுழலும் வரம்புகளின் கீழ் வழங்கப்பட்ட வசதிகளை அறவிடுதல் உட்பட)
- அறவிடப்பட்ட வட்டி: ரூபா 77.7 மில்லியன்
- அறவிடப்பட்ட தரகு/ ஏனைய வருமானம்: ரூபா 47.2 மில்லியன்

நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக பெரும்பாலான செயற்திட்டங்களை கம்பனி நிறுத்தியுள்ளது.

RDA இடமிருந்து பெறப்பட வேண்டிய மொத்தத் தொகை - ரூபா 730.0. RDA இடமிருந்து பெறப்பட வேண்டிய பெறுவனவுகளில் இருந்து மறுசீரமைப்பு கடன் தவணைகளை மீள செலுத்துவதற்கு கம்பனி இணங்கியது.

**<u>அனுடன் ஹோல்டிங்ஸ்</u>**

வாடிக்கையாளர் தற்போது 02 தொழிற்படு மூலதன வசதிகளை மாத்திரமே பரீட்சித்து வருகின்றனர், மேலும் மீதமுள்ள வசதிகளை 2022 திசெம்பர் மாதத்திற்கு பின்னர் மீள்பட்டியலிடுவதற்கு இணங்கியுள்ளனர், இல்லையெனில் வங்கி அதற்கான மேலதிக நடவடிக்கைகளைத் தொடங்கும்.

**<u>ஆர் என் கென்ஸ்ட்ரக்ஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்</u>**

கம்பனி GOSL மற்றும் தனியார் செயற்திட்டங்களின் நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுள்ளது. தற்போதுள்ள வசதிகளை மீள்பட்டியலிட்டு கம்பனிக்கு புதிய தொழிற்படு மூலதன வசதிகளை வழங்குவதன் மூலம் கம்பனியை புதுப்பிப்பதற்கு வங்கி தீர்மானித்துள்ளது, மேலும் வாடிக்கையாளர்களின் மொத்த காசுப்பாய்ச்சலை வங்கிக்கு அனுப்புவதற்கும், காலப்போக்கில் அனைத்து வசதிகளையும் அறவிடுவதற்கும் வங்கி எதிர்பார்க்கிறது. குறிப்பாக தற்போது கம்பனி GOSL செயற்திட்டங்களை விட தனியார் செயற்திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து வருகிறது.

அந்த BRR அலகின் பிரகாரம், 2021 திசெம்பரில் மறுமலர்ச்சி திட்டத்தை அமுல்ப்படுத்தியிருந்தது.
மறுமலர்ச்சிக்குப் பின்னர் கம்பனியின் செயலாற்றல் பின்வருமாறுள்ளது.

- ரூபா 812.0 மில்லியன் மொத்த காசுப்பாய்ச்சல் மறுமலர்ச்சி காலப்பகுதிக்கு மாற்றப்பட்ட பின்னர் நடைமுறைக் கணக்கிற்கு அனுப்பப்பட்டிருந்தது.
- அறவிடப்பட்ட மூலதனம்: ரூபா 63.0 மில்லியன்
- அறவிடப்பட்ட வட்டி: ரூபா 20.5 மில்லியன்
- அறவிடப்பட்ட தரகு : ரூபா 14.8 மில்லியன்
- RDA இடமிருந்து பெறவேண்டியது - ரூபா 44.0 மில்லியன்

ஆனால் நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக பெரும்பாலான செயற்திட்டங்கள் தாமதமாகி வருகிறதுடன் எதிர்பார்த்த காசுப்பாய்ச்சல் குறைவடைந்துள்ளது. RDA மற்றும் ஏனைய தனியார் செயற்திட்டங்களில் இருந்து பெறப்படும் காசுப்பாய்ச்சல்களில் இருந்து மீள்பட்டியல் கடன் தவணைகளை தீர்ப்பனவு செய்வதற்கு கம்பனி

| | | | |
|---|---|---|---|
| | | இணங்கியிருந்தது.<br><br>**<u>என் பீ பூட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்</u>**<br>சட்ட நடவடிக்கைகள் தொடர்கின்றன. அதேநேரம், ஈடுவைக்கப்பட்டுள்ள இரண்டு சொத்துக்களை அப்புறப்படுத்துவதன் மூலம் கடன் வசதி தொடரின் ஒரு பகுதியைத் தீர்ப்பனவு செய்வதற்கு வாடிக்கையாளர் கோரிக்கை விடுத்துள்ளதுடன் அதற்கு கடன் குழுவின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. | |
| (vi) | சில வாடிக்கையாளர்களுக்கு ஒரு குறிப்பிட்ட ஆண்டில் கடன்கள் வழங்கப்பட்டதுடன் அந்த கடன்கள் அதே ஆண்டில் NPL வகைக்கு மாற்றப்படுகின்றன (மீள்பட்டியலிடப்பட்ட வசதிகள் விலக்கப்பட்டுள்ளன). மேலே உள்ள வகைக்குள் வரும் முதல் 10 வாடிக்கையாளர்கள் தொடர்பாக பகுப்பாய்வொன்று செய்யப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் இந்த 10 வாடிக்கையாளர்களுக்கு ரூபா 795.56 மில்லியன் வழங்கப்பட்டுள்ளதுடன், அதில் 86 சதவீதம் அல்லது ரூபா 683.77 மில்லியன் அதே 2021 ஆம் ஆண்டில் செயற்பாடற்ற வகைக்கு மாற்றப்பட்டுள்ளது. | 2022.05.25 இல் கூட்டுத்தாபன முகாமைத்துவக் குழு மூலம் ஒவ்வொரு மாதமும் 1வது வாரத்தில் கடன் குழுவிற்கு வசதிகளைப் அறிக்கையிடுவதற்கான ஒரு பொறிமுறையை அமுல்ப்படுத்துவதற்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது, இது ரூபா 5 மில்லியனிற்கு மேற்பட்ட மற்றும் அதற்கும் குறைவான இரண்டு வசதிகளுக்கும் வழங்கப்பட்ட திகதியிலிருந்து முதல் ஆறு மாதங்களுக்குள் NPCFs ஆகக் கருதப்படுகிறது.<br><br>**<u>எஸ் டி கே யுனைடெட் அக்ரி வென்ச்சர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்</u>**<br>சோயா பீன்ஸ் மற்றும் சோயா உணவுகளை இறக்குமதி செய்வதற்கும் சோயா எண்ணெய்யை ஏற்றுமதி செய்வதற்கும் இந்த வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. முக்கியமாக எஸ்டிகே ”உமேகா” என்ற வியாபாரக்குறியீட்டின் கீழ் மக்காச்சோளத்தை கொள்வனவு செய்து, களஞ்சியப்படுத்தி, விற்பனை செய்கிறதுடன் சோயா எண்ணெயை உற்பத்தி செய்கிறது. மேலும் உள்ளூர் சந்தைக்கு விலங்கு உணவுகளை வழங்குகிறது. கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக, எஸ்டிகே ஆல் அதனது வணிக சுற்றுவட்டத்தை தொடர்ந்து பேண முடியாதிருந்ததுடன் சுற்றுவட்டம் வீழ்ச்சியடைந்தது. எனவே குறுகிய கால கடன் வசதிகள் அதே | ஒரு குறிப்பிட்ட வாடிக்கையாளருக்கு கடன்களை வழங்குவதற்கு முன்னர் வங்கியால் திருப்திகரமான வாடிக்கையாளர் மதிப்பீடுகள் செய்யப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

ஆண்டில் NPA வகைக்கு மாற்றப்பட்டன.
DGM & AGM – அறவீடு மாகாணங்கள் மற்றும் மதவாச்சி பகுதியின் பகுதி முகாமையாளர் ஆகியோர் 2022 ஏப்ரலில் அறவீட்டு நடவடிக்கையை மேற்கொள்வதற்கு எஸ்டிகே இற்கு வருகை தந்தனர்.

தற்போது, அனைத்து வசதிகளும் 2022.08.31 இல் வணிக மறுமலர்ச்சி பிரிவுக்கு மாற்றப்பட்டு, மறுமலர்ச்சி செயன்முறை ஆரம்ப கட்டத்தில் உள்ளது.

**<u>டி எஸ் குணசேகர பயணிகள் போக்குவரத்து மற்றும் டி எஸ் குணசேகர (பிறைவேட்) லிமிட்டட்</u>**
குத்தகை வாடகைகளை அறவிடுவதற்கு உப கால கடன்களை உருவாக்குவதன் மூலம் தவணைப்பணம் காலந்தாழ்த்தி செலுத்தும் உரிமை வழங்கப்பட்டிருந்தது. புதிய நிதிகள் வாடிக்கையாளருக்கு வழங்கப்படவில்லை. எனினும், போக்குவரத்துத் துறையில் கொவிட் தொற்றுநோயின் தொடர்ச்சியான தாக்கத்தின் காரணமாக உப கடன்களும் NPA பிரிவிற்கு மாற்றப்பட்டன.

தற்போது இருக்கும் வசதிகள் மற்றும் உப கடன் வசதிகள் குத்தகை வசதிகளைத் தவிர்த்து BRRU இற்கு மாற்றப்பட்டுள்ளன.

**<u>செனாரோ மோட்டார் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்</u>**
வணிக மறுமலர்ச்சி நடவடிக்கைகள் தொடங்கப்பட்டு நிதியளிப்பு நிலையில் உள்ளன. வாடிக்கையாளர்கள் 2023 சனவரி முதல் காசுப்பாய்ச்சல்களை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கிறார்கள், அங்கு கம்பனி இன்னும் தேவையான அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்வதிலும் நிர்மாண நடவடிக்கைகள் & போன்றவற்றை

பூர்த்தி செய்வதிலும் உள்ளது.

**கே டி ஈபேர்ட் அன்ட் சன்ஸ் ஹோல்டிங் (பிறைவேட்) லிமிட்டட்**

கே டி ஈபேர்ட் அன்ட் சன்ஸ் ஹோல்டிங் (பிறைவேட்) லிமிட்டட்டுடன் தொடர்புடைய 6.2 (v) ஆம் பந்தியின் கீழ் கொடுக்கப்பட்ட பதில்களைப் பார்க்கவும்.

அனுர அப்பரல் எக்ஸ்போட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

ஏற்றுமதி கட்டளைகளிற்கு நிதியளிப்பதற்கு வசதி வழங்கப்பட்டது. அறவீட்டு நடவடிக்கை இடம்பெற்று வருகிறது.

**அல்மார் ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட்**

கூட்டுத்தாபன கிளையில் பேணப்படும் கம்பனியின் கணக்கு மூலம் அனுப்பப்பட்ட ஏற்றுமதி பெறுவனவுகளில் இருந்து பல packing credit கடன்களை (PCL) வங்கி அறவிட்டுள்ளது. சரியான தீர்ப்பனவுத் திட்டம் இல்லாததால், கம்பனியின் கடன் கோவைகள் ஏற்கனவே அறவீட்டு கூட்டுத்தாபன பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளன. கம்பனி மற்றும் பணிப்பாளர்கள் மீது சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**கில்கிறிஸ்ற் லீசுவர் (பிறைவேட்) லிமிட்டட்**

தற்போதுள்ள அனைத்து வசதிகளும் செயலாற்றல் (performing) பிரிவில் உள்ளன. சுற்றுலா பிரிவின் கீழ் 2019 ஆம் ஆண்டு முதல் தவணைப்பணம் காலந்தாழ்த்தி செலுத்துவதற்கான சலுகை வழங்கப்பட்டுள்ளது.

**டி பி ஜெயசிங்க ரூர்ஸ் & டிரான்ஸ்போர்ட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்**

விடய கடன்களானது கொவிட் தொற்றுநோய் காலத்தில் வழங்கப்படும் காலந்தாழ்த்தி செலுத்துவதற்கான உரிமைக்கு மாற்றப்பட்ட கடன்களாகும்.

கம்பனி 2016 சனவரியில் இருந்து

கூட்டுத்தாபன வாடிக்கையாளர்களுக்கு அலுவலக இடத்தை வாடகைக்கு விடும் நோக்கத்துடன், இல. 717, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09 இல் 07 மாடி வணிகக் கட்டிடத்தை பூர்த்தி செய்தது, அது இன்னும் செயற்படவில்லை. 100% காசுப்பாய்ச்சலை BOC இற்கு வழங்குவதற்கு கம்பனியால் உறுதியளிக்கப்பட்ட கடிதங்கள் கொடுக்கப்பட்டிருந்த போதிலும், தற்போதுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு அது செயற்படவில்லை. கொவிட் பெருந்தொற்றின் தொடர்ச்சியான தாக்கம் மற்றும் நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக நிலைமை மோசமடைந்தது. தற்போது, விடய கடன்கள் உட்பட அனைத்து பொறுப்புக்களும் NPA இற்கு மாற்றப்பட்டுள்ளன. எனவே, அறவீட்டு நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு கடன் கோவைகள் 2022.10.14 இல் அறவீட்டு கூட்டுத்தாபன பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளன.

**யு எஸ் எஸ் எஞ்சினியரிங் (பிறைவேட்) லிமிட்டட்**

கால கடன் வசதிகள் 2020 ஆம் ஆண்டில் செயற்றாடற்ற வகைக்கு மாற்றப்பட்டது.

கடைசியாக 2021.10.25 இல் வசதி வழங்கப்பட்டது. கடன் இல. 88015977 வழங்கப்பட்ட தொகை ரூபா 31.5 மில்லியன் மற்றும் நிலுவையாக உள்ள தொகை ரூபா 3.75 மில்லியன் ஆகும். கம்பனிக்கு சொந்தமான சொத்துக்களை கலைப்பதன் மூலம் NPA நிலையை தீர்ப்பதற்கு கம்பனி இணங்கியது.

| | | |
|---|---|---|
| (vii) கடந்த நான்கு வருட காலப்பகுதியில் வங்கியின் பல்வேறு துறைகளுக்காக வழங்கப்பட்ட கடன்கள் மீதான செயற்பாடற்ற விகித கணிப்பீட்டை பகுப்பாய்வு செய்யும் போது, உற்பத்தி, போக்குவரத்து மற்றும் களஞ்சியம், நிர்மாணம், சுகாதாரப் பாதுகாப்பு, சமூக சேவைகள் மற்றும் ஆதரவு சேவைகள் மற்றும் நுகர்வு ஆகியவற்றின் | உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட் 19 பெருந்தொற்று, நாணயமாற்று விகித தளம்பல் மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றின் தாக்கம் காரணமாக கடந்த நான்கு ஆண்டுகளில் வங்கியின் செயற்பாடற்ற விகிதம் | வங்கியின் செயற்பாடற்ற விகிதத்தை குறைந்தபட்ச அளவில் பேணுவதற் |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாடற்ற விகிதங்கள் கடந்த நான்கு ஆண்டு காலப்பகுதியின் போது படிப்படியாக அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டது. | படிப்படியாக அதிகரித்துள்ளது.<br><br>2022.12.31 வரை அறவீடு/ சட்ட நடவடிக்கையை இடைநிறுத்துவதற்கான அரசாங்கக் கொள்கை தீர்மானத்துடன் சிக்கல் மோசமடைந்துள்ளது. | கு தேவையான நடவடிக்கையை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (viii) | **சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு வழங்கப்பட்ட கடன்**<br>--------------------------------------------------------------------------------------------<br>சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு 2011 இல் முதல் வசதி வழங்கப்பட்டதுடன் 2014 இல் அவை மேம்படுத்தப்பட்டது. வசதிகள் ஆரம்பத்தில் 2015 இலும் மீண்டும் தவணைக்காலத்தை அதிகரித்து ஏற்கனவே உள்ள வட்டி விகிதங்களைக் குறைப்பதன் மூலம் 2017 இலும் மீளப்பட்டியலிடப்பட்டன. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் மொத்தக் கடன் போர்ட்போலியோ 13 முக்கிய கடன்கள் மற்றும் 11 துணைக் கடன்களைக் கொண்டுள்ளதுடன் மொத்த தொகுதி வெளிப்பாடு ரூபா 2,370 மில்லியன் ஆகும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>• 2019 திசெம்பர் முதல் வழங்கப்பட்ட 13 பிரதான கடன்களில், 11 கடன்கள் ஏற்கனவே உள்ள கடன்களை மீள்பட்டியலிடுவதற்கு அல்லது தற்போதுள்ள நாணயக் கடிதங்கள் / உண்டியல்களை ஏற்றுக்கொள்ளுதல் / கடன் தொடர் (ஒருமுறை மற்றும் அனைத்திற்கும்) வசதியின் கீழ் நிலுவையாக உள்ளவற்றை மாற்றுவதற்காக வழங்கப்பட்டுள்ளன.<br>• 13 பிரதான கடன்களில், 9 கடன்கள் 24 மாத சலுகைக்காலத்துடனும் மற்றொரு கடன் 12 மாத சலுகைக் காலத்துடனும் வழங்கப்பட்டுள்ளன. எனவே இந்த 10 கடன்கள் இன்னும் செயற்படும் வகையிலேயே உள்ளன.<br>• கம்பனியின் ஒட்டுமொத்த நிதி செயலாற்றல் சாதகமாக காணப்படவில்லை. கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இது 2011/12 முதல் 2019/20 வரை குறிப்பிடத்தக்க தேறிய நட்டத்தை பதிவு செய்துள்ளதுடன் கடந்த ஒன்பது வருட காலப்பகுதியின் போது நட்டம் கணிசமாக அதிகரித்து வருகிறது. 2019/2020 இல் கம்பனியின் எதிர்மறை தேறிய பெறுமதி ரூபா | 2021 யூன் மாதத்தில் எதிர்வுகூறப்பட்ட காசுப்பாய்ச்சலுடன் மாதாந்த அறவீட்டை ஒப்பிடுவதன் மூலம், கம்பனியின் மொத்த கடன் போர்ட்போலியோ மறுசீரமைக்கப்பட்டது. எனினும், தொற்றுநோய்களின் விளைவுகள், பாதகமான பொருளாதார நிலைமை, இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் கொடப்பனவுகளை சேகரிப்பதில் எதிர்கொள்ளும் பல்வேறு சிரமங்கள் ஆகியன கம்பனியின் காசுப்பாய்ச்சலை பாதித்துள்ளன.<br><br>எனவே, திட்டமிட்டவாறு வசதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. வாடிக்கையாளரின் வேண்டுகோளின் பேரில், 2022 மே முதல் 2022 நவம்பர் வரையிலான காலப்பகுதியில் கம்பனியின் பல கடன்களுக்கு நாங்கள் தவணைப்பணம் காலம்தாழ்த்தி லுெத்தும் உரிமையை வழங்கியுள்ளோம்.<br><br>கம்பனி அதனது வணிகத்தை பல்வகைப்படுத்துவதன் மூலம் தற்போதைய நிலையை சமாளிப்பதற்கு புதிய வணிகத் திட்டத்தைக் கொண்டுள்ளது. இந்த கடினமான நேரத்தில் கம்பனிக்கு உதவுவதற்காக, வணிகத்தை புதுப்பிக்கும் நோக்கத்துடன், 2022 ஆகஸ்ட் மாதத்தில் கோவை வணிக மறுமலர்ச்சி மற்றும் புனரமைப்பு பிரிவுக்கு மாற்றப்பட்டது. கம்பனி சமர்ப்பித்த புதிய மறுமலர்ச்சித் திட்டத்தை வங்கி நெருக்கமாக கண்காணித்து வருகிறதன் மூலம் நிலுவையை அறவிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | ஒரு குறிப்பிட்ட வாடிக்கையாளருக்கு கடன்களை வழங்குவதற்கு முன்னர் திருப்திகரமான வாடிக்கையாளர் மதிப்பீடுகள் வங்கியால் செய்யப்பட்டிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

3.7 பில்லியனை அடைந்துள்ளது. இந்தக் கடன்களை வழங்குவதற்கு முன்னர் கம்பனியின் சாதகமற்ற நிதி நிலைமையை வங்கி கருத்தில் கொண்டிருக்கவில்லை.

- சலுகைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் நிபந்தனைகளை கம்பனியால் பூர்த்தி செய்ய முடியவில்லை.
  - 2018 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் கூறப்பட்ட மூலதனத்தை ரூபா 300 மில்லியனாக உயர்த்துதல்.
  - பணிப்பாளர்களால் மாதாந்தம் சான்றுறுதிப்படுத்தப்பட்ட இருப்புக்கள் மற்றும் புத்தகக் கடன் கூற்றுக்களை வழங்குதல்.
  - கொழும்பு 07, ஹோர்டன் பிளேஸில் அமைந்துள்ள கம்பனியின் தலைவரின் தனிப்பட்ட சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் பெறப்படும் வருமானத்திலிருந்து ரூபா 365.4 மில்லியன் தொகையான காலக் கடன் வசதியின் கீழ் உள்ள மொத்த நிலுவையை தீர்ப்பனவு செய்தல்.

- 2020 மே 12 ஆம் திகதிய 2.12 ஆம் இலக்க சபைக் கூட்டக்குறிப்பின் பிரகாரம் இந்த கம்பனிக்கு மேலும் எந்த வசதியும் வழங்க வேண்டாம் என சபை தீர்மானித்திருந்தது. எனினும் கம்பனியின் கோரிக்கையின் அடிப்படையில் ரூபா 850 மில்லியன் புதிய கடன் தொகுப்பு 2021 மே 06 இல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

- 2021 நவம்பர் 17 ஆம் திகதிய 2.6 ஆம் இலக்க சபைக் கூட்டக் குறிப்பின் பிரகாரம் ஈடுவைக்கப்பட்ட சொத்துக்களுக்கு **குழு மதிப்பீட்டாளரால் (Panel Valuer) முன்வைக்கப்பட்ட சந்தை பெறுமதியின்** அடிப்படையில் 100 சதவீதம் வரை முன்பண விகிதத்தை கருத்தில் கொள்வதற்கு முடிவு செய்யப்பட்டது. எனினும், ஏனைய வசதிகளுக்கான சுற்றறிக்கையின் பிரகாரம் **வங்கியின் மதிப்பீட்டாளர்களால் முன்வைக்கப்படும் கட்டாய விற்பனை பெறுமதியின்** அடிப்படையில் முற்பண விகிதம் 60 சதவீதமாகக் கருதப்படுகிறது. எனவே, வங்கியானது கம்பனிக்கு அதிக கடன் வசதிகளை வழங்குவதன் மூலம் மிகவும் சாதகமான நடவடிக்கைகளை வழங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ix) **ஸ்ரீ இக்யூப்மென்ட் பினான்ஸ் லிமிட்டட்டிற்கு (SEFL) வழங்கப்பட்ட கடன்கள்**
---------------------------------------------------------------------------------------

ஸ்ரீ இக்யூப்மென்ட் பினான்ஸ் லிமிட்டட் (SEFL) என்பது கனோரியா அறக்கட்டளையின் ஒரு பகுதியாகும், இது இந்தியாவின் கல்கத்தாவில் உள்ள கனோரியா குடும்பம், தலைமையலுவலகத்தால் நிறுவப்பட்டது. இந்திய ரிசர்வ் வங்கியின் (Reserve Bank of India) வழிகாட்டல்களுக்கு இணங்க, SEFL இன் முதன்மை ஆலோசகர் மற்றும் ஏற்பாட்டாளராக சிங்கப்பூர் ஸ்ராண்டர்ட் சார்ட்டர்ட் வங்கியால் ஐ.அ.டொலர் 110.0 மில்லியன் குழுக் கால கடன் (syndicate term loan) வசதி வழங்கப்பட்டுள்ளது. ஐந்து வருட காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டிய குழுக் கடனுக்கான BOC சந்தாவாக 2018 யூலை 30 இல் ஐ.அ.டொலர் 15.0 மில்லியன் தொகையை வங்கி வழங்கியுள்ளது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2017 செப்தெம்பர் 25 ஆம் திகதிய மின்னஞ்சல் மூலம் ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கிக்கு இரகசியத்தன்மை உடன்படிக்கையை அனுப்பும் போது, பிணை ஆவணங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆவணங்களில் கையெழுத்திடுவதற்கான அதிகார கையளிப்பிற்காக சபை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

- 2017 திசெம்பர் 07 ஆம் திகதிய இலங்கை வங்கி – கரைகடந்த வங்கிப் பிரிவினால் ஸ்ரீ இக்யூப்மென்ட் பினான்ஸ் லிமிட்டட்டிற்கு அனுப்பப்பட்ட சலுகைக் கடிதம், கையளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் பிரதி பொது முகாமையாளர் - கூட்டுறவு மற்றும் கரைகடந்த வங்கியால் கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை.
- நான்கு ஆண்டு காலத்தின் (2014 - 2017) கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கம்பனி அதன் நிதி முடிவுகளின் சரிவுப் போக்கைக் காட்டுகிறது. கம்பனியின் தேறிய தொழிற்படு மூலதன நிலைமை கடந்த 4 ஆண்டுகளில் அதிகரித்த எதிர்மறை தொகையை காட்டுகிறது. கம்பனியின் உரிமை மூலதனத்திற்கான கடன் விகிதமும் உயர்ந்த நிலையைக் காட்டுகிறது.

- 2017 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய அழைப்புக்

கடன் முன்மொழிவுகளை மதிப்பிடுவதற்கு கடன் பெறுபவரிடம் இருந்து பூர்வாங்க தகவல்கள் எப்பொழுதும் பெறப்படுகின்றன. syndicate ஏற்பாட்டாளராக இருந்து, ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கி, இலங்கை வங்கிக்கு இரகசிய உடன்படிக்கையை (CA) அனுப்பியுள்ளது, மேலும் ஒரு வங்கியின் வணிக நலன்களை போட்டிக்குள் பாதுகாப்பது தொழில்துறையில் ஒரு விதிமுறை என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். அத்தகைய CA ஒன்றில் கையொப்பமிடுவதன் மூலம், கடன் பெறுபவர் அல்லது குழுக் கடன் ஏற்பாட்டின் எந்தவொரு முக்கியமான தகவலையும் வெளியிடாமல் பாதுகாப்பதற்கும் மற்றும் வெளியிடாமல் இருப்பதற்கும் இலங்கை வங்கி கடமைப்பட்டுள்ளது. கடன் பெறுபவரை ஒரு ஒப்பந்தத்திற்காக அணுகுவதையும் இது தடுக்கிறது.

கடன் பெறுபவர் இந்த CA இல் ஒரு தரப்பினர் அல்ல, மேலும் வங்கியின் பணிப்பாளர் சபையுடனான சிண்டிகேஷனுக்கு (syndication) முதன்மை உடன்படிக்கையில் இருக்கும் போது சிண்டிகேட் கட்சி மற்றும் ஏற்பாட்டாளர் என்ற முறையில், AGM (OB) சிண்டிகேஷனுக்காக வங்கியின் சார்பாக அத்தகைய புரிதலை மேற்கொள்ளும் திறனைக் கொண்டிருக்கும்.

மேற்கூறிய CA இல் தனித்தனியாக கையொப்பமிடும்போது, இரகசிய ஒப்பந்தம் அல்லது அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றில் கையொப்பமிடுவதன் மூலம் வங்கிக்கு எந்த இழப்பும் ஏற்படவில்லை.

கடன் வாங்கியவர் இந்த வசதியில் வேண்டுமென்றே கடனைத் திருப்பிச் செலுத்தாதவர் அல்ல மேலும் ஸ்ரீ

ஒரு குறிப்பிட்ட வாடிக்கையாளருக்கு கடன்களை வழங்குவதற்கு முன்னர் திருப்திகரமான வாடிக்கையாளர் மதிப்பீடுகள் வங்கியால் செய்யப்பட்டிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

கடிதத்தின் மேலதிக தகவல்களின் பிரகாரம், இந்த வசதியில் பங்கேற்க நினைக்கும் ஒவ்வொரு நிறுவனமும் கடன் வாங்குபவரின் நிதி நிலை மற்றும் விவகாரங்கள் குறித்து அதன் சொந்த சுயாதீன விசாரணையை நடாத்த வேண்டியதுடன் கடன் மற்றும் வசதியை பெறுபவரின் கடன் தகுதியைப் பற்றி அதன் சொந்த மதிப்பீட்டைச் செய்ய வேண்டும். எனினும், வங்கி எந்தவொரு வாடிக்கையாளர் மதிப்பீட்டையும் நடாத்தவில்லை அல்லது நிறுவனத்தின் சாதகமற்ற நிதி நிலையை கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. குழுக் கடன் வசதிக்காக, கட்டாய முன்னணி ஏற்பாட்டாளராக செயற்படும் ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கியை (SCB) மாத்திரமே இது சார்ந்துள்ளது.

- பாதுகாக்கப்பட்ட பெறவேண்டியவைகளிற்கு (secured receivables) எதிராக கடன் வழங்கப்பட்டுள்ளதுடன் கடன் வசதியை வழங்குவதற்கு முன்னர் வங்கி எந்தவொரு சுயாதீன சரிபார்ப்பு அல்லது பாதுகாக்கப்பட்ட பெறவேண்டியவைகளின் வயது பகுப்பாய்வையும் நடாத்தியிருக்கவில்லை.

- இந்தக் கடன் 2021 திசெம்பர் 14 இல் செயற்பாடற்ற வகைக்கு மாற்றப்பட்டது. ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கியிடமிருந்து பெறப்பட்ட தகவலின் பிரகாரம் கம்பனி திவாலானதாக அறிவித்து, ஒவ்வொரு கூட்டமைப்பு பங்கேற்பாளருக்கும் தனித்தனியாக உரிமைகோரல்களைத் தாக்கல் செய்யும்படி அறிவித்துள்ளது. எனினும், KPMG பட்டயக் கணக்காளர்களால் நடாத்தப்பட்ட தடயவியல் கணக்காய்வின் பிரகாரம் கம்பனியின் சொத்துக்கள் பொறுப்புகளை தீர்ப்பதற்கு போதுமானதாக இல்லை என்று இந்திய ரிசர்வ் வங்கி (RBI) நம்புகிறது. எனவே, இந்த கடனை திரும்ப பெறுவது சந்தேகத்திற்கிடமாக உள்ளது.

இக்யூப்மென்ட் பினான்ஸ் லிமிட்டட்டின் காசுப்பாய்ச்சல் கொவிட்-19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்டது, இடைக்காலத்தில் கம்பனி திவாலாகி விட்டது.

சலுகை கடிதம் என்பது நிறுவனத்திற்கான அழைப்பாகும், இது ஒரு வசதி, அதன் பண்புக்கூறுகள், அதன் பண்புகள் மற்றும் நிபந்தனைகளை உள்ளடக்கி, விவரிக்க மற்றும் வரம்பிட முன்மொழியப்பட்டது. அத்தகைய சலுகை பணிப்பாளர் சபையின் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞாபனத்தின் பிரித்தெடுப்பாகும். சலுகைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன், கடன் ஒப்பந்தம் உட்பட உண்மையான கடன் ஆவணங்கள் வங்கிக்கும் நிறுவனத்திற்கும் இடையே மேற்கொள்ளப்படுகிறது.

இந்த உடன்படிக்கையில் பிரதி பொது முகாமையாளர் (கூட்டுத்தாபனம் மற்றும் கரைகடந்த வங்கி) கையெழுத்திட்டார், எனவே கையளிக்கப்பட்ட அதிகாரத்தின் தேவைப்பாடு முழுமையாக மேற்கொள்ளப்பட்டது.

2017.11.28 ஆம் திகதிய விஞ்ஞாபனத்தில் வங்கியின் நிலையான வடிவத்தின் பிரகாரம் நிதி பகுப்பாய்வு கொடுக்கப்பட்டுள்ளது, இது புரள்வு, PAT, EBITD, தேறிய தொழிற்படு மூலதனம் மற்றும் மொத்த கடன் / மூலதனம் ஆகியவற்றின் போக்குகளை தெளிவாகக் குறிக்கிறது.

மொத்த வருமானத்தில் சரிவு, நடைமுறை விகிதத்தின் நிலை மற்றும் நிறுவனத்தின் இணைவு (leverage) விகிதத்தின் நிலை ஆகியன விஞ்ஞாபனத்தின் நிதி மதிப்பீட்டின் கீழ் விளக்கப்பட்டுள்ளன. ஸ்ரீ என்பது நுண் சந்தைகளுக்கான கடன் சேவையகமாகக் கருதப்படுகிறதுடன் ஒரு நிதி

நிறுவனத்தின் அளவுருவுக்கு இணங்குகிறதுடன் அத்தகைய நிதி நிறுவனம் மூலதனத்திற்கான சாதாரண கடன் சுட்டிகளை விட அதிகமாக பதிவு செய்கிறது.

ஸ்ரீ இக்யூப்மென்ட் பினான்ஸ் லிமிட்டட்டின் சந்தை மூலதனம் ஐ.அ..ஃ.டொலர் 10 பில்லியனாகும். கடன் வசதிக்காக கம்பனியை மதிப்பிடும் நேரத்தில் அது இந்தியாவில் இலாபம் ஈட்டும் வணிக நிறுவனங்களில் ஒன்றாக இருந்தது.

கடன் முன்மொழிவு ஏனைய கடன் முன்மொழிவைப் போலவே மதிப்பிடப்பட்டது. கடன் பகுப்பாய்வு மற்றும் கடன் பெறுபவரின் கடன் தகுதி மதிப்பீடு ஆகியன பரிந்துரைக்கும் மற்றும் அங்கீகரிக்கும் அதிகாரிகளின் திருப்திக்கு செய்யப்படாவிட்டால், வழக்கமாக அவர்கள் கடன் விஞ்ஞாபனத்தை அங்கீகாரம் இல்லாமல், முறையான கடன் மதிப்பீட்டுடன் அதனை மீண்டும் சமர்ப்பிப்பதற்கு அறிவுறுத்தி பிற்போடுவார்கள். மேலதிக தகவலுக்கு, ஸ்ரீ இக்யூப்மென்ட் பினான்ஸ் லிமிட்டட்டின் சந்தை மூலதனம் ஐ.அ.டொலர் 10 பில்லியன் ஆக இருந்தது. கடன் வசதியை வழங்குவதற்காக கம்பனியை மதிப்பிடும் நேரத்தில் அது இந்தியாவில் இலாபகரமான வணிக நிறுவனங்களில் ஒன்றாக இருந்தது.

இந்த குழுக் கடன் வசதியை வழங்கும் போது, கம்பனி பாதுகாக்கப்பட்ட பெறவேண்டியவைகளை பகிர்ந்து கொண்டது. ஸ்ரீ இன் முதல் பத்து வாடிக்கையாளர்கள் உட்பட பாதுகாக்கப்பட்ட பெறவேண்டியவை.

CIRP செயன்முறைக்கான காலவரிசை.

| விபரங்கள் | காலவரிசை |
|---|---|
| திவால் தொடங்கும் திகதி | 08-10-2021 |
| பொது அறிவிப்பு வெளியீடு | 11-10-2021 |
| CoC இன் 1வது கூட்டம் | 02-11-2021 |
| IM ஐ CoC இற்கு சமர்ப்பித்தல் | 26-11-2021 |
| EoI இன் படிவம் G / அழைப்பிதழை வெளியிடுதல் | 25-02-2022 |
| EoI சமர்ப்பிப்பு | 12-03-2022 |
| RP இன் RAs ஏற்பாட்டு பட்டியல் | 22-03-2022 |
| ஏற்பாட்டு பட்டியலிற்கான ஆட்சேபனைகளை சமர்ப்பித்தல் | 27-03-2022 |
| மதிப்பீடு, Matrix மற்றும் IM உட்பட RFRP ஐ வழங்குதல் | 01-04-2022 |
| ஆர்பி (தீர்மான செயன்முறை)இன் RAs இன் இறுதிப் பட்டியல் (தீர்மான விண்ணப்பங்கள்) | 06-04-2022 |
| தீர்மானத் திட்டங்களின் சிட்டை (தற்போதுள்ளது) | 07-06-2022 |
| தீர்மானத் திட்டங்களின் சிட்டை (திருத்தப்பட்டது) | 30-08-2022 |
| NCLT இல் COC அங்கீகரித்த தீர்மானத் திட்டத்தை தாக்கல் செய்வதற்கான கடைசி நாள் | 04-11-2022 |

2022.05.31 வரையான காசு சேகரிப்பு (கடந்த எட்டு மாதங்கள்)

UCO இல் FD வைப்பு - Crore INR

1,350.00

காசு மீதி - Crore INR 261.99

மொத்தம் - Crore INR 1,611.99

ஐ.அ.டொலர் மில்லியன் 209.55 இல்

Crore 1 = இந்திய ரூபா 10,000,000

இந்திய ரூபா 1 = ஐ.அ.டொலர் 0.013

மூன்று (3) PRAs (வருங்காலத் தீர்மான பயன்பாடுகள்) ஆல் இது தொடர்பாக நடாத்தப்படும் செயலில் விடாமுயற்சி குறித்து நிர்வாகி CoC உறுப்பினர்களுக்கு விளக்கினார். மேலும் PRAs இற்கும் நிர்வாகி மற்றும் அவரது ஆலோசகர்கள் உட்பட முகாமைத்துவக் குழுவிற்கும் இடையே இது தொடர்பாக பல கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன.

மூன்று PRA பின்வருமாறுள்ளன.

1. அரினா இன்வெஸ்டர்ஸ் எல்பி
2. VFSI ஹோல்டிங் பிறைவேட் லிமிட்டட் அன்ட் ஷோன் ரந்தாவா
3. ராஜேஷ் வீரேன் ஷா (HNIs)

(x) **டபிள்யூ எம் மென்டிஸ் அன்ட் கம்பனி லிமிட்டட்டிற்கு வழங்கப்பட்ட கடன்கள்**

------------------------------------------------------------------------------------------

டபிள்யூ எம் மென்டிஸ் அன்ட் கம்பனி லிமிட்டட் என்பது ஒரு தனியார் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாகும், மேலும் இது பரந்த அளவிலான தேங்காய் மற்றும் கலப்பு மதுபான தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் மற்றும் போத்தலில் இடுதலில் ஈடுபட்டுள்ளது. வங்கி கம்பனிக்கு கடன் பொதியை வழங்கியுள்ளதுடன் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- வங்கியானது 2016 யூன் 8, 2018 யூலை 09, 2019 செப்தெம்பர் 18 மற்றும் 2020 மே 12 ஆகிய திகதிகளில் டபிள்யூ எம் மென்டிஸ் அன்ட் கம்பனிக்கு புதிய வசதிகள் மற்றும் ஏற்கனவேயுள்ள வசதிகளுக்கான பல விரிவாக்கங்களுக்கு அங்கீகாரம் அளித்துள்ளது.

  2020 மே 12 இல் கம்பனிக்கு அங்கீகரிக்கப்பட்ட கடன் தொகுப்பில் ரூபா 2,055 மில்லியன் மீள்பட்டியலிடப்பட்ட காலக்

2018/2020 காலப்பகுதியில், வணிகத்தை புதுப்பிக்கும் நோக்கத்துடன் வங்கி பல வசதிகளை வழங்கியுள்ளது.

மேற்கூறிய ஏற்பாடுகளின் விளைவாக, 2018/2020 காலப்பகுதியில் வங்கியால் மொத்தமாக ரூபா 300.0 மில்லியன் (ஏறத்தாழ) வட்டியையும் ரூபா 550.0 மில்லியன் மூலதனத் தொகையையும் அறவிட முடிந்தது. மேலும், 2018.12.31 அளவில் வங்கியால் ரூபா 2.3 பில்லியன் பெறுமதியான வசதிகளை செயற்பாடற்ற வகையில் இருந்து செயல்படும் வகைக்கு மாற்ற முடிந்தது.

கம்பனி தமது தற்போதைய வசதிகளை மீள்பட்டியலிடுமாறு விடுத்த கோரிக்கையின் பிரகாரம் 2020.10.16 இல் கம்பனியின் எதிர்வுகூறப்பட்ட காசுப்பாய்ச்சல்களின் அடிப்படையில் வங்கிக்கு மொத்தம்

ஒரு குறிப்பிட்ட வாடிக்கையாளருக்கு கடன்களை வழங்குவதற்கு முன்னர் திருப்திகரமான வாடிக்கையாளர் மதிப்பீடுகள் வங்கியால் செய்யப்பட்டிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

கடன், ரூபா 240 மில்லியன் காலக்கடன், ரூபா 318 மில்லியன் இன்னொரு மீள்பட்டியலிடப்பட்ட கடன் மற்றும் ரூபா 500 மில்லியன் மேலதிகப்பற்று வசதி ஆகியன உள்ளடங்குகிறது. அனைத்து வசதிகளும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் செயற்பாடற்ற வகைக்கு மாற்றப்பட்டுள்ளன.

- உற்பத்தி உரிமம் புதுப்பிக்கப்படாததால் 2020 ஒக்தோபர் முதல் கம்பனியின் வணிகம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. தற்போது கலால் திணைக்களம் கல்குடா ஆலையில் உற்பத்தியைத் தொடங்க எத்தனோல் உரிமத்தையும் வெலிசர தொழிற்சாலையில் ENA கலவையை மீண்டும் தொடங்குவதற்கான கலப்பட உரிமத்தையும் வழங்கியுள்ளதுடன் ஏற்கனவே 2022 செப்தெம்பர் 02 இல் கலப்பு உற்பத்தியை ஆரம்பித்துள்ளது.

- 2017/2018 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் அறிக்கையின் பிரகாரம் கம்பனியின் தொடர்ச்சியான இழப்புகள் மற்றும் எதிர்மறை தேறிய சொத்துக்களின் நிலை காரணமாக கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு சந்தேகத்திற்குரியதாக உள்ளது. எவ்வாறாயினும், கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு பிரச்சினையை கருத்தில் கொள்ளாமல் வங்கி தொடர்ந்து கடன்களை வழங்கியுள்ளது.

- 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வாடிக்கையாளரின் மொத்த நிலுவை மீதி ரூபா 3,417 மில்லியன் ஆகும். மொத்த நிலுவைத் தொகையில், ரூபா 858.6 மில்லியன் அல்லது 25 சதவீதம், இல. 309, கொழும்பு வீதி, வெலிசரவில் அமைந்துள்ள ஈடுவைக்கப்பட்ட சொத்திற்கு எதிராக மாத்திரமே பாதுகாக்கப்பட்டுள்ளது. ரூபா 2,558 மில்லியன் அல்லது 75 சதவீத மிகுதி நிலுவை கடன்பட்டோர் மற்றும் இரண்டு பணிப்பாளர்களின் கூட்டு மற்றும் பல உத்தரவாதங்கள் மீதான அடமானத்திற்கு எதிராக மாத்திரமே பாதுகாக்கப்படுகிறது.

ரூபா 3.1 பில்லியன் (ரூபா 318.0 மில்லியன் அட்டுறு வட்டியும் சேர்த்து) கூட்டுமொத்தமான மீள்பட்டியல் தொகுப்பு வழங்கப்பட்டது.

எனினும், கலப்பு உரிமம் மற்றும் எத்தனோல் உற்பத்தி உரிமம் மதுவரி திணைக்களத்தால் வழங்கப்படாததாலும், நாட்டின் மோசமான பொருளாதார நிலைமையாலும் முன்மொழியப்பட்ட காசுப்பாய்ச்சல் வங்கிக்கு அனுப்பப்படவில்லை.

கலக்குடா தொழிற்சாலையில் கலத்தல் மற்றும் போத்தலில் இடல் செயற்பாட்டை மீண்டும் தொடங்குவதற்கும் எத்தனோல் (ENA) உற்பத்தியைத் தொடங்குவதற்கும் உரிய கலால் கொடுப்பனவை திருப்பிச் செலுத்தும் உடன்படிக்கைக்கு உட்பட்டு, 2022 ஆகஸ்டில் மதுவரி திணைக்களத்தால் கம்பனிக்கு தொடர்புடைய அனைத்து உரிமங்களும் வழங்கப்பட்டன.

கம்பனி 2022 செப்தெம்பர் 2 இல் வெலிசர தொழிற்சாலையில் கலப்பு உற்பத்தியைத் தொடங்மீளபட்டியல் தொகுப்பை வழங்குவதற்கு வங்கி கம்பனியுடன் பேச்சுவார்த்தை நடாத்தி வருகிறது.

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | 2020 செப்தெம்பர் 10 ஆம் திகதிய 23/2020 ஆம் இலக்க உத்தியோகபூர்வ அறிவுறுத்தல் சுற்றறிக்கையின் 10.2.2 ஆம் பிரிவு | காசுப்பாய்ச்சல்கள் நட்டக்கழிவிற்கான பிணைய அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்ட 57 எண்ணிக்கையிலான நட்டக்கழிவிடப்பட்ட ISL வாடிக்கையாளர்களின் மதிப்பீட்டு அறிக்கைகளை ஆய்வு செய்தபோது, 49 எண்ணிக்கையிலான மதிப்பீட்டு அறிக்கைகள் 2021 திசெம்பர் 31 வரையான அதன் செல்லுபடியாகும் காலத்தை கடந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. மதிப்பீட்டு அறிக்கை காலாவதியாகும் முன்னர் புதிய மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெறுவதற்கான படிமுறைகளை வங்கி எடுத்திருக்கவில்லை. | புதிய மதிப்பீட்டு அறிக்கைகள் பெறும் பணி நடைபெற்று வருகிறது. | காலாவதியான அனைத்து மதிப்பீடுகளுக்கும் புதிய மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (ii) | 2020 நவம்பர் 20 ஆம் திகதிய 28/2015 ஆம் இலக்க அலுவலக அறிவுறுத்தல் சுற்றறிக்கையின் பின்னிணைப்பு II (ஈ). | வசதிகளுக்கான பிணையாக வழங்கப்படும் வணிக அசையாச் சொத்தின் வங்கியின் மதிப்பீட்டில் அதிகபட்சமாக வழங்கப்படும் தொகை 60 சதவீதமாக வரையறுக்கப்பட வேண்டும். எனினும், பின்வரும் சந்தர்ப்பங்களில், முற்பண விகிதம் வங்கியால் பரிந்துரைக்கப்பட்ட வரம்பை மீறப்பட்டுள்ளது. முற்பண விகிதத்தை மீறுவதற்கு தேவையான அனுமதிகள் பெறப்பட்டிருந்த போதிலும் அதிக முற்பண வழங்கல் காரணமாக அறவீடு சந்தேகத்திற்குரியதாக உள்ளது. விபரங்கள் பின்வரும் அட்டவணையில் சித்தரிக்கப்பட்டுள்ளன. | அசையும் மற்றும் தனிப்பட்ட உத்தரவாததாரர்களை விட பிணையாக அசையாச் சொத்தின் வலிமையைக் கருத்தில் கொண்டு, அதிக முற்பண விகிதம் உரிய கையளிக்கப்பட்ட அதிகாரத்தின் அங்கீகாரத்துடன் கருத்தில் கொள்ளப்பட்டிருந்தது.<br><br>**மாத்தளை SGB கடன் இலக்கம் 81860047**<br>2017 இல் ரூபா 10 | கையளிக்கப்பட்ட அதிகாரத்திற்குள் அங்கீகாரம் வழங்கப்பட்ட போதிலும் குறிப்பிட்ட வாடிக்கையாளர்களுக்கு கடன்களை வழங்குவதற்கு முன்னர் வங்கியால் திருப்திகரமான வாடிக்கையாளர் மதிப்பீடுகள் செய்யப்பட்டிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| கிளை | கடன் இல. | வழங்கப்பட் | முற்பண |
|---|---|---|---|

| | | ட கடன் தொகை (ரூபா' மில்.) | விகிதம் |
|---|---|---|---|
| மாத்தளை | 81860047 | 10 | 90 |
| தெஹிவளை | 87921034 | 19.946 | 97.68 |
| புறக்கோட்டை மேற்தரம் | 83021533 | 22 | 77.5 |
| | 80616471 | 6.88 | 86 |
| | 83705902, 83804150, 83842455, 83842477, 83864905 76636343 (POD) | 129.376 | 120.65 |
| | 81905345 | 16 | 78 |
| | 81905521 | 15.5 | 77.5 |
| | 83649075 83649168 83648984 | 26 | 69.76 |
| | 77628017 | 12.8 | 91 |
| | 85953934 | 5.3 | 91 |
| | 79110440 | 40 | 100 |

மில்லியன் கடன் வசதியை முன்மொழிந்த போது, முற்பண விகிதம் FSV+ BOQ இல் 54% என்று கிளை உறுதிப்படுத்தியது. தற்போது, கிளை ஏற்கனவே Parate செயற்பாட்டின் அறவீட்டு நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.

**தெஹிவளை கிளை**

கடன் இலக்கம் 87921034 அசோகா கிளாஸ் & மிரர் பிறைவேட். லிமிட்டட்

இது வாடிக்கையாளரின் பல வசதிகளை ஒருங்கிணைப்பதன் மூலம் மீள்பட்டியலிடுதல் வசதியாகும். இணைக்கப்பட்ட பகுதி வசதிக்கான மேலதிக பிணைகளை வாடிக்கையாளர் வழங்க முடியாததால், ROA வரம்பை விரிவுபடுத்தும் அசையாச் சொத்தின் மூலம் பாதுகாக்கப்பட்டது.

புறக்கோட்டை மேற்தரம்

குறித்த கடன்கள் மற்றும் மேலதிகப்பற்றுககள் சொத்துக்கள் மீதான அடமானத்திற்கு

எதிராக முன்பண விகிதம் உட்பட தொடர்புடைய அங்கீகாரங்களுடன் வழங்கப்பட்டுள்ளன. கடன் வசதிகளை வழங்கும் போது, நாங்கள் பிரதானமாக கம்பனியின் காசுப்பாய்ச்சலை முதலாவது மீள்கொடுப்பனவு ஆதாரமாகக் கருதுகிறதுடன் எதிலும் பிணை இரண்டாவது வழியாகக் கருதப்படுகிறது. இதற்கு மேலதிகமாக கடன் தகுதி, கடந்தகால செயலாற்றல் மற்றும் ஏற்கனவே பெற்ற கடன்களின் திருப்திகரமான மீள்கொடுப்பனவு போன்றன பரிசீலிக்கப்படும். மேலும் நாங்கள் பின்வருவனவற்றை எடுகோள்களாக கொள்கிறோம்

1. கடன்களை முறையாக திருப்பிச் செலுத்துவதால், முற்பண விகிதம் சாதகமாக குறைவடையும்
2. எதிர்காலத்தில் சொத்துக்களின் பெறுமதி அதிகரிக்கும்

எவ்வாறாயினும், குறித்த வசதிகளுக்குப் பொருந்தக்கூடிய தொடர்புடைய அறவீட்டு

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைகளை நாங்கள் செயற்படுத்தி வருகிறோம். | |
| (iii) | 1938 இன் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் | பின்வரும் காலப்பகுதியில் இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் குறைந்தபட்சம் 6 பணிப்பாளர்களின் தேவைகளுக்கு வங்கி இணங்கியிருக்கவில்லை.<br>• 2021 சனவரி 1 - 2021 பெப்ரவரி 17 | BOC இன் சபையில் நியமிக்கப்பட வேண்டிய பணிப்பாளர்களின் குறைந்தபட்சத் தேவைப்பாட்டிற்கு இணங்க சட்ட திணைக்களம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுள்ளது. மேலும், CBSL மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க அத்தகைய ஏனைய திருத்தங்களைச் சேர்த்துள்ளோம். 2022.04.08 இல் BOC தலைவரின் கையொப்பத்தின் கீழ் திறைசேரியின் செயலாளருக்கு நாங்கள் அதை அனுப்பியுள்ளோம். நிதி அமைச்சிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இது நிதி அமைச்சின் சட்டத் திணைக்களத்தில் உள்ளதெனவும் BOC கட்டளைச் சட்டத் திருத்தங்களின் வரைவை அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு அவர்கள் | 1938 இன் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் தேவைப்பாட்டுடன் இணங்குவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

அனுப்புவார்கள் எனவும் வெளிப்படுத்தப்பட்டு ள்ளது.

## 1.8 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

**கணக்காய்வு விடயம்**

(i) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் 25 இ (1) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு பதிவுசெய்யப்பட்ட குறிப்பிட்ட நிறுவனமும் அல்லது எந்தவொரு நபரும் அதன் மொத்த பெறுமதி சேர்க்கை மீது வரி விதிக்கக்கூடிய ஒவ்வொரு காலத்திற்கும் வரி செலுத்த வேண்டும், இதில் தேறிய இலாபம் அல்லது நட்டமானது ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணிப்பிடப்பட்ட அத்தகைய இலாபத்தின் மீதான வருமான வரியை செலுத்துவதற்கு முன்னர் பொருளாதார பெறுமானத்தேய்விற்கான சீராக்கங்களுக்கு உட்பட்டு உள்ளடங்குகின்றதுடன் அனைத்து ஊழியர்களுக்கும் செலுத்த வேண்டிய சம்பளங்களும் உள்ளடங்குகின்றன. எவ்வாறாயினும், மொத்த பெறுமதிசேர்க்கையை கணக்கிடுவதற்காக வங்கி ரூபா 70,016,639 பெறுமதியான சம்பளங்களை கருத்தில் கொண்டிருக்கவில்லை. இதன் காரணமாக, சம்பள கிரயத்தை இனங்காண்பதன் கீழ் நிதி சார்ந்த வற் தொகை ரூபா 9,073,310 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. கருத்தில் கொள்ளப்படாத சம்பளங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| பேரேட்டு கணக்கு இல. | விபரம் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி (ரூபா) |
|---|---|---|
| 62503002 | CHGS A/C பதவியணியினர் சீருடைகள் | 7,890,025.33 |
| 62503003 | CHGS A/C வங்கிக்கான HONOR PD | 23,251,637.20 |
| 62101012 | பதவியணியினரிற்கான EX-GRATIA PAY - 99-திசெம்பர் | 2,000,000.00 |

**முகாமைத்துவக் கருத்துரை**

FS பொறுப்பு மீதான வற் கணிப்பீட்டில் குறித்த பதவியணியினரின் செலவினங்களை சம்பளமாக கருதுவதற்கு உள்நாட்டு இறைவரி திணைக்களம் சர்ச்சையை தீர்த்திருக்கவில்லை.

**பரிந்துரை**

2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் 25 இ (1) ஆம் பிரிவின் தேவைப்பாட்டுடன் இணங்குவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 62101019 | பதவியணியினரிற்கு செலுத்தப்பட்ட படிகள் | 36,550,976.82 |
| 62101018 | EX-GRATIA PAY SECURTIA PAY பாதுகாப்பு பதவியணியினர் | 324,000.00 |
| **மொத்தம்** | | **70,016,639.35** |

(ii) 2016 ஏப்ரல் 29 ஆம் திகதிய பிஈடி 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் (2) ஆம் பந்தியின் பிரகாரம் IRD இன் தொடர்புடைய பிரமாணங்களின் பிரகாரம் அரச உடமையாக்கப்பட்ட தொழில்முயற்சிகளின் ஊழியர்கள் உட்பட அரசாங்க உத்தியோகத்தர்களின் உழைக்கும் போதே செலுத்தும் வரி, வரிக்கு உட்பட்ட ஊழியர்களின் வருமானத்தில் இருந்து கழிக்கப்பட வேண்டும். எனினும், வங்கிக்கும் இலங்கை வங்கியின் ஊழியர் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட கூட்டு உடன்படிக்கை ஊழியர்களின் வருமான வரிப் பொறுப்பை ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து கழிக்காமல் வங்கியால் செலுத்துமாறு அறிவுறுத்துகிறது. அதன் அடிப்படையில், 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக ஊழியர்களின் உழைப்புக்களில் இருந்து கழிக்காமல் ஊழியர்களின் சார்பில் வங்கி ரூபா 39,912,162 தொகையை உழைக்கும் போதே செலுத்தும் வரியாக செலுத்தியுள்ளது.

வங்கிக்கும் இலங்கை வங்கியின் ஊழியர் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட கூட்டு உடன்படிக்கையின் அடிப்படையில் ஊழியர்களின் வருமான வரிப் பொறுப்பை ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து கழிக்காமல் தொழில்தருநரான வங்கி செலுத்துகின்றது.

2016 ஏப்ரல் 29 ஆம் திகதிய பிஈடி 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் (2) ஆம் பந்தியின் தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

### 1.9 தகவல் தொழில்நுட்ப பொதுவான கட்டுப்பாடுகள்

**கணக்காய்வு விடயம்**

(i) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்வு மதிப்பாய்வு நேரத்தில் பதவி விலகிய ஊழியர்களின் பயனர் கணக்குகள் செயலிழக்கப்படாமல், பதவி விலகிய திகதிக்குப் பின்னரும் செயலில் இருந்தன. கீழே உள்ள அட்டவணை மேற்கூறிய சிக்கலுக்கான மாதிரியைச் சுட்டிக்காட்டுகிறது.

**ICBS**

| பயனர் ஐடி | நிலை | பதவி விலகிய திகதி (திகதி/மாதம்/ஆண்டு |
|---|---|---|

**முகாமைத்துவக் கருத்துரை**

எந்தவொரு ஊழியரினதும் பணிநிறுத்தம் ஏற்பட்டால், HRO பிரிவின் பணிநிறுத்தப் பிரிவு, முறைமைகளில் இருந்து அவரது/அவளுடைய கடவுச்சொற்களை செயலிழக்கச் செய்வதற்கு பின்வரும் தொடர்புடைய அதிகாரிகளுக்குத் அறிவிக்கிறது.

**பரிந்துரை**

பதவி விலகுவதற்கு முன்னர் பதவி விலகிய ஊழியர்களின் பயனர் கணக்குகளை செயலிழக்கச் செய்வதற்கு பரிந்துரைக்கப்ப

| | | |
|---|---|---|
| | | ) |
| 217788 | செயலில் உள்ளது | 15/12/2021 |
| 191841 | செயலில் உள்ளது | 25/12/2021 |

**<u>தங்கநகை அடகு வைத்தல்</u>**

| பயனர் ஐடி | நிலை | பதவி விலகிய திகதி (திகதி/மாதம்/ஆண்டு) |
|---|---|---|
| 217788 | செயலில் உள்ளது | 15/12/2021 |
| 191841 | செயலில் உள்ளது | 25/12/2021 |

**<u>C T பட்டியல்கள்</u>**

| பயனர் ஐடி | நிலை | பதவி விலகிய திகதி (திகதி/மாதம்/ஆண்டு) |
|---|---|---|
| 217788 | செயலில் உள்ளது | 15/12/2021 |
| 191841 | செயலில் உள்ளது | 25/12/2021 |

**<u>பினாகிள் திறைசேரி</u>**

| பயனர் ஐடி | நிலை | பதவி விலகிய திகதி (திகதி/மாதம்/ஆண்டு) |
|---|---|---|
| 154500 | செயலில் உள்ளது | 01/03/2021 |
| 173245 | செயலில் உள்ளது | 24/08/2021 |

**<u>ஸ்கை குத்தகை</u>**

| பயனர் ஐடி | நிலை | பதவி விலகிய திகதி (திகதி/மாதம்/ஆண்டு) |
|---|---|---|

- விசேட செயற்திட்டம்
- உள்ள கணக்காய்வு பிரிவு
- தகவல் தொழில்நுட்ப பிரிவு
- அட்டை நிலையம்
- கையொப்ப செயற்திட்டம்
- பின் அலுவலகம்
- SWIFT நிலையம்
- வர்த்தக சேவைகள் செயற்திட்ட அலகு
- திறைசேரி பின் அலுவலகம்
- உள்நோக்கி பணம் அனுப்புதல் பிரிவு
- திறைசேரி பிரிவு

எதிர்காலத்தில் கண்டிப்பாக கடைபிடிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.

**ICBS முறைமை**
PF217788 & PF191841 ஏற்கனவே நீக்கப்பட்டுள்ளன.

**தங்கநகை அடகு வைத்தல் முறைமை**
2022.12.31 இற்குள் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

**C T பட்டியல்கள்**
PF 217788 & PF191841 ஏற்கனவே நீக்கப்பட்டுள்ளன.

**பினாகிள் முறைமை**
பயனர்கள் செயலிழந்துள்ளனர்

**ஸ்கை குத்தகை**
PF217788 & PF191841 பயனர்கள் நீக்கப்பட்டுள்ளனர்

**சிமார்ட் பணவனுப்பல்கள்**
பயனர்கள் காலாவதியான நிலையில் இருந்ததுடன் பயனர்கள் செயலிழக்கச் செய்யப்பட்டனர்.

டுகிறது.

| | | |
|---|---|---|
| 217788 | செயலில் உள்ளது | 15/12/2021 |
| 172388 | செயலில் உள்ளது | 08/02/2021 |

**<u>சிமார்ட் பணமாக்கல்</u>**

| பயனர் ஐடி | நிலை | பதவி விலகிய திகதி (திகதி/மாதம்/ஆண்டு) |
|---|---|---|
| 194291 | செயலில் உள்ளது | 30/04/2021 |
| 173310 | செயலில் உள்ளது | 11/06/2021 |

(ii) பின்வரும் பயனர் கணக்குகள் நகல் எடுக்கப்பட்டு, ICBS, Base24 மற்றும் சிமார்ட் பணவனுப்பல் முறைமைகளில் செயலில் இருப்பது அவதானிக்கப்பட்டது. கீழே உள்ள அட்டவணைகள் மேலே உள்ள சிக்கலுக்கான மாதிரியைக் சுட்டிக் காட்டுகின்றன.

**<u>ICBS</u>**

| **PF இலக்கம்** | **பயனர் பெயர்** | **நிலை** |
|---|---|---|
| 120224 | PF120224 | செயலில் உள்ளது |
| 120224 | PF120224A | செயலில் உள்ளது |
| 120224 | PF120224IC | செயலில் உள்ளது |
| 128793 | PF128793 | செயலில் உள்ளது |
| 128793 | PF128793A | செயலில் உள்ளது |
| 128793 | PF128793IC | செயலில் உள்ளது |
| 140096 | PF140096 | செயலில் உள்ளது |
| 140096 | PF140096A | செயலில் உள்ளது |
| 140096 | PF140096IC | செயலில் உள்ளது |

**ICBS முறைமை**

சில பயனர்கள் வெவ்வேறு வேலை செயற்பாடுகளுக்கு வெவ்வேறு பயன்பாட்டு நீக்கங்களைக் கொண்டுள்ளனர், எனவே வெவ்வேறு பின்னொட்டுகள் (suffixes) பயன்படுத்தப்படுகின்றன.

PF120224, PF128793 & PF140096 ஆகியன விசேட செயற்திட்டத்துடன் இணைக்கப்பட்ட பயன்பாட்டு முகாமையாளர்களாவர். அவர்கள் வெவ்வேறு வேலைப் பணிகளுக்கு இந்த பயனர் IDs செயலில் இருக்க வேண்டும்.

**Base 24**

முறைமை கட்டமைப்பின் பிரகாரம் வெவ்வேறு பயனர் செயற்பாடுகளைப் பயன்படுத்தி முறைமையின் வெவ்வேறு செயற்பாடுகளைச் செய்ய வேண்டியுள்ளது.

**சிமார்ட் பணவனுப்பல்**

குறித்துரைக்கப்பட்ட கால இலக்குக்குளிற்குள் நகல் உள்நுழைவுகளை அகற்றுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

**Base 24**

| பயனர் ID | பயனர் பெயர் | நிலை |
|---|---|---|
| 139401 | PROD.IT139401 | செயலில் உள்ளது |
| 139401 | SEC-IT139401 | செயலில் உள்ளது |
| 203810 | PROD.IT203810 | செயலில் உள்ளது |
| 203810 | SEC-IT203810 | செயலில் உள்ளது |

**சிமார்ட் பணவனுப்பல்கள்**

| உள்நுழைதல் ID | பயனர் வகை | நிலை |
|---|---|---|
| 168197 | முகவர் | செயலில் உள்ளது |
| 168197 | BOC கிளை | செயலில் உள்ளது |

**முறைமை**

செயற்படுத்தும் காலத்தில் அதே ID விசாரணை நோக்கங்களுக்காக ஒரு முகவராக உருவாக்கப்பட்டது, இப்போது அது அகற்றப்பட்டது.

முறைமையிலிருந்து நகல் உருப்படி அகற்றப்பட்டது.

இலக்கு தேதி:- 2022.12.31

(iii) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஸ்கை குத்தகை முறைமையில் பயன்படுத்தப்படாத பயனர் கணக்குகள் இருப்பது அவதானிக்கப்பட்டது, ஏனெனில் நிதிக் காலப்பகுதியில் கீழே உள்ள பயனர்கள் முறைமையில் உள்நுழையவில்லை. மேற்படி சிக்கலுக்கான மாதிரியை பின்வரும் அட்டவணைகள் சுட்டிக்காட்டுகின்றன.

| பயனர் ID | கிளை | கடைசி உள்நுழைவு திகதி (திகதி/மாதம்/ஆண்டு) | நிலை |
|---|---|---|---|
| 87756028 7V | B தரம் - அம்பாந்தோட்டை | 18/02/2020 | செயலில் உள்ளது |
| 133285 | இலங்கை வங்கி | பயனர் முறைமையில் உள்நுழையவில்லை | செயலில் உள்ளது |
| 141953 | நகர அலுவலகம் | 18/06/2013 | செயலில் உள்ளது |

பயனர் உருவாக்கம் கிளை மட்டத்தில் கையாளப்படுகிறது, அதிகாரத்தை ஒதுக்குகிறது மற்றும் பயன்பாட்டு முகாமையாளர்களால் பயனர் நீக்கம் செய்யப்படுகின்றன.

சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலக்கு திகதி:- 2022.12.31

குறிப்பிட்ட கால இலக்குக்குள் சிக்கலை சீர்செய்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 155342 | இலங்கை வங்கி | 16/05/2017 | செயலில் உள்ளது |
| 177453 | இலங்கை வங்கி | 27/01/2014 | செயலில் உள்ளது |
| 177479 | இலங்கை வங்கி | 24/07/2013 | செயலில் உள்ளது |
| 128604 | வடமேல் மாகாணம் | 16/10/2020 | செயலில் உள்ளது |
| 130457 | 2வது நகரம் குருநாகல் | பயனர் முறைமையில் உள்நுழையவில்லை | செயலில் உள்ளது |
| 166795 | ஊர்பொக்க | 10/10/2013 | செயலில் உள்ளது |
| 167016 | DGM கிளைகள் பிரிவு | 15/05/2015 | செயலில் உள்ளது |
| 167298 | தவலம | 24/07/2013 | செயலில் உள்ளது |
| 168981 | இலங்கை வங்கி | 22/12/2017 | செயலில் உள்ளது |
| 169210 | ஜெயந்திபுரம் | 28/01/2020 | செயலில் உள்ளது |
| 169533 | அகலவத்த | பயனர் முறைமையில் உள்நுழையவில்லை | செயலில் உள்ளது |
| 169880 | பகுதி 3 NCP | பயனர் முறைமையில் உள்நுழை | செயலில் உள்ளது |

| | | | |
|---|---|---|---|
| | | யவில்லை | |
| 169939 | வட மத்திய மாகாணம் | 31/01/2020 | செயலில் உள்ளது |
| 194465 | DGM கிளைகள் பிரிவு | 27/08/2015 | செயலில் உள்ளது |
| 200270 | மொரட்டுமுல்ல | 27/04/2015 | செயலில் உள்ளது |
| 200452 | பத்தேகம | 17/11/2017 | செயலில் உள்ளது |
| 211079 | நாரஹேன்பிட்டி | 02/11/2018 | செயலில் உள்ளது |
| 214479 | WPS பகுதி 2 | பயனர் முறைமையில் உள்நுழையவில்லை | செயலில் உள்ளது |
| 216756 | கல்கிசை | 17/10/2018 | செயலில் உள்ளது |
| 228983 | கேகாலை பகுதி | பயனர் முறைமையில் உள்நுழையவில்லை | செயலில் உள்ளது |
| 193194 | ஹதரலியத்த | 17/09/2018 | செயலில் உள்ளது |

(iv) கீழே உள்ள முறைமைகளின் பயன்பாட்டு நிலை பாதுகாப்பு உள்ளமைவுகளுக்கு போதுமான கடவுச்சொல் அளவுருக்களை வங்கி வரையறுத்திருக்காதமை அவதானிக்கப்பட்டதுடன் குறைபாடுகள் கீழே உள்ள அட்டவணையில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

| கடவுச்சொல் | பயன்பாடு | பயன்படுத்தப்பட்ட | முன்னணி |
|---|---|---|---|

**பினாகிள் திறைசேரி, ஸ்கை குத்தகை, வர்த்தக நிதி, Base 24 & இருப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ முறைமைகளின் குறைந்தபட்ச கடவுச்சொல் நீளம்,**

தொழில்நுட்ப திறன் உள்ளது; வணிகம் / பயனர் தாக்கம் மதிப்பாய்வு செய்யப்பட வேண்டியுள்ளது.

பயன்பாட்டு நிலை பாதுகாப்பு உள்ளமைவுகளுக்கு போதுமான கடவுச்சொல் அளவுருக்களை வரையறுப்பதற்கு பரிந்துரைக்கப்ப

| அளவுரு | | அமைப்பு | பயிற்சி |
|---|---|---|---|
| குறைந்தபட்ச கடவுச்சொல் நீளம் | பினாகிள் திறைசேரி | 6 எழுத்துக்கள் | 8 எழுத்துகள் அல்லது அதற்கு மேற்பட்டவை. |
| | ஸ்கை குத்தகை | 6 எழுத்துக்கள் | |
| | வர்த்தக நிதி | 6 எழுத்துக்கள் | |
| | Base 24 | 6 எழுத்துக்கள் | |
| | இருப்பு மற்றும் சொத்து முகாமைத்துவம் | 6 எழுத்துக்கள் | |
| ஆரம்ப உள்நுழைவு பயனர்கள் ஒரு முறை கடவுச்சொல் | வர்த்தக நிதி | வரையறுக்கப்படவில்லை | ஆம் |
| கடவுச்சொல் சிக்கலானது | வர்த்தக நிதி | வரையறுக்கப்படவில்லை | முடியும் |
| கட்டாய கடவுச்சொல் மாற்றங்களின் அதிர்வெண். * | வர்த்தக நிதி | 90 நாட்கள் ** | 90 நாட்கள் - 4 கடவுச்சொல் |
| | சிமார்ட் பணவனுப்பல் | வரையறுக்கப்படவில்லை | |
| கடவுச்சொல்லை மீண்டும் பயன்படுத்துவதற்கு முன்னர் பயன்படுத்தப்பட வேண்டிய கடவுச்சொ | வர்த்தக நிதி | 1 கடவுச்சொல் | |
| | சிமார்ட் பணவனுப்பல் | வரையறுக்கப்படவில்லை | |

டுகிறது.

**வர்த்தக நிதி முறைமை**

புதிய வர்த்தக நிதி முறைமை குறித்த தேவைப்பாடுகளுடன் இணங்குகிறது

**சிமார்ட் பணவனுப்பல் முறைமை**

சிமார்ட் பணவனுப்பல் முறைமையில் இந்த அம்சங்கள் இல்லாதது விற்பனையாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. சிமார்ட் பணவனுப்பல் சமீபத்தில் செய்யப்பட்ட மறு வேலைகளால் மாற்றப்பட்டது.

**ICBS**

வெவ்வேறு பயனர்களுக்கான வெவ்வேறு அமர்வு காலக்கெடுவை வரையறுப்பது ICBS முறைமையில் அவர்களின் வேலைச் செயற்பாடுகளைப் பொறுத்து இன்றியமையாததாகும், எனினும் இந்த வசதி தற்போதைய ICBS முறைமையில் காணப்படவில்லை.

| | | | |
|---|---|---|---|
| ாற்களின் எண்ணிக்கை. * | | | |
| செயலற்ற அமர்வு வெளியேறும் நேரம் | ICBS | 30 நிமிடம் | 15 நிமிடங்கள் அல்லது குறைவாக |
| | பினாகிள் திறைசேரி | 30 நிமிடம் | |
| | வர்த்தக நிதி | வரையறுக்கப்படவில்லை | |
| | சிமார்ட் பணவனுப்பல் | 20 நிமிடங்கள் | |

*குறைந்தது ஒரு வருடத்திற்கு ஒரே கடவுச்சொல்லைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்கு, இந்த இரண்டு அளவுருக்களும் ஒன்றோடொன்று இணைக்கப்பட வேண்டும்.

** இந்த அளவுரு போதுமான அளவு அமைக்கப்பட்டுள்ளது.

(v) ICBS மற்றும் பினாகிள் திறைசேரிக்காக தெரிவுசெய்யப்பட்ட மாதிரியின் பிரகாரம் முகாமைத்துவ மாற்ற செயன்முறைக்குள் கடமைகளை பிரிப்பது காணப்படாதமை அவதானிக்கப்பட்டது. இத்தகைய சிக்கல்கள் கீழே உள்ள அட்டவணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

**ICBS**

| **மாற்ற இலக்கம்** | **மாற்ற விபரம்** | **மாற்றம் உருவாக்கப்பட்டது** | **மாற்றம் உருவாக்கப்பட்டது** |
|---|---|---|---|
| CSO 5034 607 | தொடர்பாளர் சேவை மூலம் செய்யப்படும் காசோலை புத்தக கட்டளைகளுக்கு பயனர் ஐடி தோன்றவில்லை - | டிஎச்ஏ ஜயரத்ன - சிரேஷ்ட முறைமை பகுப்பாய்வாளர் | டிஎச்ஏ ஜயரத்ன-சிரேஷ்ட முறைமை பகுப்பாய்வாளர் |

**ICBS**
பயன்பாட்டு விற்பனையாளரால் (Fiserv) இந்தத் திருத்தங்கள் அனைத்தும் அனுப்பப்பட்டதுடன் டிஎச்ஏ ஜெயரத்னவால் அவை உருவாக்கப்படவில்லை

**பினாகிள் திறைசேரி**
முன்வைக்கப்பட்டது.
வளமூல வரம்புகள் காரணமாக சிக்கல் ஏற்பட்டதுடன் எதிர்கால பணியிலீடுபடுத்தல்களில் சீர்செய்யப்படும்.

இனங்காணப்பட்ட முறைமைகளில் கடமைகளை பிரிப்பதற்கு தேவையான நடவடிக்கையை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கை TA0800P1 | | |
| BOC LP24 | கடன் பராமரிப்பு பதிவு (செயற்படுத்திய பின் திருத்தம்) | டிஎச்ஏ ஜயரத்ன - சிரேஷ்ட முறைமை பகுப்பாய்வாளர் | டிஎச்ஏ ஜயரத்ன- சிரேஷ்ட முறைமை பகுப்பாய்வாளர் |
| BOC LP23 | வரவு அட்டை green pin செயற்படுத்தல் | டிஎச்ஏ ஜயரத்ன - சிரேஷ்ட முறைமை பகுப்பாய்வாளர் | டிஎச்ஏ ஜயரத்ன- சிரேஷ்ட முறைமை பகுப்பாய்வாளர் |
| BOC LP27 | வரவு அட்டை green pin செயற்படுத்தல் | டிஎச்ஏ ஜயரத்ன - சிரேஷ்ட முறைமை பகுப்பாய்வாளர் | டிஎச்ஏ ஜயரத்ன- சிரேஷ்ட முறைமை பகுப்பாய்வாளர் |
| CSO 0555 1955 | IBSD & IBCD கொடுக்கல் வாங்கல் குறியீடுகள் வரகின்ற S/O கடன் மாற்றங்கள் தொடர்பான சிக்கல் | டிஎச்ஏ ஜயரத்ன - சிரேஷ்ட முறைமை பகுப்பாய்வாளர் | டிஎச்ஏ ஜயரத்ன- சிரேஷ்ட முறைமை பகுப்பாய்வாளர் |

**பினாகிள் திறைசேரி**

| **மாற்ற இலக்கம்** | **மாற்ற விபரம்** | **மாற்றம் உருவாக்கப்பட்டது** | **மாற்றம் உருவாக்கப்பட்டது** |
|---|---|---|---|
| 05 | பினாகிள் திறைசேரி முறைமையில் நாணயமாற்று விகிதங்கள் சுற்றறிக்கையில் புதிய | எஸ்எம் எஸ்சி விபுலசேசன- முறைமை பகுப்பா | எஸ்எம்எஸ்சி விபுலசேன- முறைமை பகுப்பா |

| | | | |
|---|---|---|---|
| | நாணயத்தை (THB) சேர்த்தல் மற்றும் முக்கிய வங்கி முறைமையில் கவனம் செலுத்தும் விகிதங்களை வெளியிடுதல் | ய்வாளர் II | ய்வாளர் II |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 37.6 பில்லியன் இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 17.8 பில்லியனாக காணப்பட்டதனால் நிதிசார் விளைவுகளில் ரூபா 19.8 பில்லியன் தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. நேரொத்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் வட்டி வருமானம் ரூபா 34.2 பில்லியனால் அல்லது 15 சதவீதத்தால் அதிகரித்துள்ளமை இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணமகும்.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் முக்கிய வருமான செலவின விடயங்களின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவு சதவீதத்துடன் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | வேறுபாட்டு தொகை அதிகரிப்பு/ (குறைவு) (ரூபா. பில்லியன்) | வேறுபாடு % | வேறுபாட்டிற்கான காரணம் |
|---|---|---|---|
| ------------- | ---------------------------- | --------------- | ----------------------------------------------- |
| வட்டி வருமானம் | 34.2 | 15 | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாணடில் முக்கியமாக மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் முதலீடுகளின் அதிகரிப்பு காரணமாக வட்டி வருமானம் அதிகரித்திருந்தது.<br><br>மீளாய்வாண்டிற்கான மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 461.5 பில்லியன் அல்லது 22 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.<br><br>மீளாய்வாண்டிற்கான மொத்த முதலீடு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 338 பில்லியன் அல்லது 43 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. DST மேலதிகப்பற்றை தீர்ப்பனவு செய்வதற்கு திறைசேரி பிணைமுறிகளில் முதலீடு செய்தமை இந்த அதிகரிப்புக்கு முக்கிய காரணமாகும். |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| வட்டி செலவினம் | (2.2) | 2 | ஆண்டு முழுவதும் நிலவிய குறைந்த வட்டி விகிதங்களினால் வட்டிச் செலவினம் குறைவடைந்துள்ளது.<br><br>எனினும், வங்கியின் வைப்பு அடிப்படை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 392.1 பில்லியன் அல்லது 16 வீதத்தால் அதிகரித்துள்ளது.<br><br>முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் கடன்கள் ரூபா 263 பில்லியன் அல்லது 146 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. |
| | | | |
| கடன் மற்றும் ஏனைய நட்டங்களிற்கான நட்டக்கழிவு கட்டணங்கள் | 12.5 | 40 | நிலை II மற்றும் III கடன் வெளிப்படுத்துகை அதிகரிப்பு, அரசாங்கம் மற்றும் SOE வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்ட கடன்கள் மற்றும் ஏனைய முதலீடுகளிற்கான ஏற்பாடு, சுற்றுலா மற்றும் நிர்மாணம் போன்ற இடர் அதிகமான தொழில்கள் மீதான நட்டக்கழிவு ஏற்பாடு அதிகரிப்பு மற்றும் நிலை I வங்கியின் கடன் போர்ட்போலியோவின் அதிகரிப்பு காரணமாக நிலை I நட்டக்கழிவு ஏற்பாடு அதிகரித்தமை ஆகியவற்றின் காரணமாக நட்டக்கழிவு கட்டணம் அதிகரித்துள்ளது. |

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வங்கியின் குறித்த சில முக்கிய விகிதங்கள் கீழே தரப்படுகின்றன.

| **விபரம்** | **துறை விகிதம் *** | **வங்கி** | |
|---|---|---|---|
| | | **2021** | **2020** |
| --------- | ----------------- | --------- | --------- |
| **செயலாற்றல் விகிதங்கள்** | | | |
| உரிமை மூலதனம் மீதான திரும்பல் (ஆர்ஓஈ) | 10.9 | 21.0 | 11.9 |
| சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ) | 1.0 | 1.3 | 0.9 |
| வட்டி எல்லை | 3.1 | 3.3 | 2.8 |
| **சொத்து தர விகிதங்கள்** | | | |
| மொத்த செயற்பாடற்ற முற்பணங்கள் (என்பிஎல்) | 4.7 | 5.1 | 5.0 |
| **மூலதன போதுமை விகிதங்கள்** | | | |
| தட்டு 1 மூலதனம் (ஆகக் குறைந்தது 9%) | 13.1 | 14.3 | 11.2 |
| மொத்த மூலதனம் (ஆகக் குறைந்தது 13%) | 16.7 | 17.8 | 14.9 |
| **நியதிச்சட்ட விகிதம் (ஆகக் குறைந்த தேவைப்பாடு 20%)** | | | |
| திரவச் சொத்து விகிதம் (உள்நாடு) | 33.8 | 25 | 26.6 |

* துறை விகிதங்கள் இலங்கை மத்திய வங்கியால் பிரசுரிக்கப்பட்ட வருடாந்த புள்ளிவிபரங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) வங்கியின் முன்னாள் பொது முகாமையாளர், வங்கியின் சம்பளக் கொள்கையின் பிரகாரம் ஓய்வு பெறும்போது அவருக்கு ஒதுக்கப்பட்ட வாகனத்தை கொள்வனவு செய்துள்ளார். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>• முன்னாள் பொது முகாமையாளருக்கு வங்கியின் பதில் பொது முகாமையாளராகப் பொறுப்பேற்கும் போது, பதில் பொது முகாமையாளரின் இயலளவில் அவருக்கு முன்னர் ஒதுக்கப்பட்ட வாகனத்திற்கு (Nissan XTrial Jeep) பதிலாக, ஒரு குழாம் வாகனத்தை (Toyota Land Cruiser Prado டீசல் வாகனம்) வங்கி அவருக்கு ஒதுக்கியுள்ளது. போக்குவரத்து முகாமையாளரால் தொடர்புடைய வாகனக் கோவையில் இடப்பட்ட கூட்டக் குறிப்பிற்கு பதிலாக இந்த ஒதுக்கீட்டிற்கு சபை அங்கீகாரம் அல்லது எந்த முறையான ஆவணமும் கிடைக்கவில்லை.<br><br>• தகுதியான நபர்களுக்கு குழாம் வாகனத்தை ஒதுக்கும் போது உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறையில் குறைபாடு அவதானிக்கப்பட்டது.<br><br>• முன்னாள் பொது முகாமையாளர், ஒதுக்கப்பட்ட வாகனத்தின் உரிமைத்துவத்தை தனக்கே மாற்றுவதற்கான அங்கீகாரத்தை கோரி தலைவருக்கான விஞ்ஞாபனத்தில் கையொப்பமிட்டபோது ஒரு அக்கறை முரண்பாடு அவதானிக்கப்பட்டது.<br><br>• மனித வளங்கள் மற்றும் சம்பளக் குழு 2016 ஆகஸ்ட் 16 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில், வங்கியில் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் பொது முகாமையாளராக பணிபுரியும் வங்கியின் பொது முகாமையாளர் ஓய்வு பெற்ற வங்கியின் பொது முகாமையாளரின் கண்ணியத்தைப் பேணுவதற்காக அவரது ஒய்விற்கு 2 ஆண்டுகளிற்கு முன்னர் புதிய வாகனம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு | தொடர்புடைய சபையின் அங்கீகாரம் கிடைக்கின்றது. (கூட்டக் குறிப்பு இல. 19.08.2021/4.2)<br><br>திரு.குணசேகர பொது முகாமையாளர் பதவியில் விஞ்ஞாபனத்தை கையெழுத்திட்டுள்ளார்.<br><br>சபை அங்கீகாரத்தின் பிரகாரம் கொடுக்கல்வாங்கல் செயற்படுத்தப்பட்டது. (கூட்டக் குறிப்பு இல. 19.08.2021/4.2). | தகுதியான நபர்களுக்கு குழாம் வாகனத்தை ஒதுக்குவதற்கு முறையான உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறையை அமுல்ப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | அனுமதிக்கப்பட வேண்டும் என முதன்மையாக பரிந்துரைத்தது. எனினும் வங்கியின் சம்பள கொள்கையின் ஓய்வூதிய நலன் பிரிவில் மேற்படி மாற்றங்களை இணைத்து திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. மேற்கூறிய திருத்தங்களின் பிரகாரம் முன்னாள் பொது முகாமையாளர் வங்கியின் பிரதி பொது முகாமையாளர் பதவியில் அவருக்கு முன்னர் ஒதுக்கப்பட்ட நிசான் XTrial ஜீப்பின் வாகனத்தை மாத்திரமே கொள்வனவு செய்வதற்குத் தகுதியுடையவர் என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (ii) | வாகன இறக்குமதி தடை செய்யப்பட்ட காலப்பகுதியில் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு வங்கி நிதி அமைச்சின் சார்பாக LCs ஐ திறந்துள்ளது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>• நிதியமைச்சால் வெளியிடப்பட்ட 2021 மார்ச் 18 ஆம் திகதிய BD/GPS/13/01/2021 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் 225 மோட்டார் ஜீப்கள், 50 டபிள் கெப்கள், 50 உயர் கூரை ஆம்புலன்ஸ்கள் மற்றும் 50 நீர் பவுசர்களை நிதி அமைச்சிற்காக இறக்குமதி செய்வதற்கு 2021 ஏப்ரல் 21 இல் வங்கி 8 LCs ஐ திறந்துள்ளது.<br><br>• அக்காலப்பகுதியில் வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட தடையை முறியடிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.<br><br>• 2021 ஏப்ரல் 21 இல் LC வசதிகள் திறக்கப்பட்ட பின்னரே இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் அங்கீகாரம் 2021 ஏப்ரல் 23 இல் வழங்கப்பட்டது,<br><br>• அதைத் தொடர்ந்து, 225 எண்ணிக்கையிலான புத்தம் புதிய டொயோட்டா லேண்ட் குரூஸர் பிராடோ ஜீப்களை இறக்குமதி செய்வதற்காக திறக்கப்பட்ட 03 LCs 2021 மே 28 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் நிதி அமைச்சால் செய்யப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் | அனைத்து LCs உம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளரின் அங்கீகாரத்துடன் திறக்கப்பட்டன.<br><br>வியாபார சேவைகள் திணைக்களத்தின் படி, LC 2021.04.23 மற்றும் 2021.04.29 இல் திறக்கப்பட்டது, இது இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளரின் அனுமதியைப் பெற்ற பின்னர் ஆகும்.<br><br>நிதி அமைச்சின் கோரிக்கையின் பேரில் LCs இரத்து செய்யப்பட்டன. உரிய தரப்பினருடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைக்குப் பின்னர் அதை இரத்து செய்யுமாறு நிதி அமைச்சு கோரியுள்ளது.<br><br>குத்தகை வசதிகளைக் கோரும் நேரத்திலும், LCs ஐ திறக்கும் நேரத்திலும் சந்தை விகிதம் குறைவாக இருந்தது. மேலும், அதிக வட்டி விகிதத்தைப் பயன்படுத்தக் கோரி நிதி அமைச்சிற்கு பல கோரிக்கைகள் அனுப்பப்பட்டன. கோரிக்கைகள் ஏற்கப்படவில்லை.<br><br>அனைத்து குத்தகை வசதிகளும் 2022.10.21 இல் | பொருத்தமான அங்கீகாரங்களுடன் LCs ஐ திறப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

இரத்து செய்யப்பட்டன. LCs தொந்தரவு இல்லாமல் இரத்துச் செய்யப்பட்ட போதிலும் தேவையான அங்கீகாரங்கள் பெறப்படாமல் LCs ஐ திறப்பதில் வங்கி அதிக அபாயத்தை எடுத்துள்ளது என்பது தெளிவாகிறது. இல்லையெனில் வங்கி இரத்து செய்ததற்காக ரூபா 6,047,048 கிரயத்தை தண்டப்பணமாக செலுத்த வேண்டியிருக்கும்.

- இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் நிதி குத்தகைக்காக ஆண்டொன்றிற்கு முன்மொழியப்பட்ட வட்டி விகிதம் 7.5% ஆகும். இது சந்தை வட்டி விகிதத்தை விட குறைவாக உள்ளது.

- இறக்குமதி செய்யப்பட்ட சில வாகனங்கள் ஏற்கனவே பல அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள போதிலும் விநியோகிக்கப்பட்ட வாகனங்களுக்கான குத்தகை வசதிகள் இன்னும் உருவாக்கப்படவில்லை.

- அனைத்து வாகனங்களும் 2021 ஒக்தோபரில் வங்கியினால் LCs மூலம் செலுத்தப்பட்ட மொத்தக் கட்டணத்துடன் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இந்த வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக வங்கி ஏறக்குறைய ரூபா 1,140 மில்லியன் இலங்கை ரூபா அடிப்படையில் செலுத்தியுள்ளது. இறக்குமதி செய்யப்பட்டு 11 மாதங்கள் கடந்துள்ள போதிலும், இதுவரை வாகனங்களுக்கான குத்தகைக் கொடுப்பனவுகளை வங்கி பெறவில்லை.

- சில வாகனங்கள் பதிவு செய்யப்பட்டு ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டிருந்த போதிலும், இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து வாகனங்களின் முழு உரிமைத்துவமும் வங்கியிடம் உள்ளது. இந்த வாகனங்கள் ஏனைய நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் போது ஏற்படும் சேதங்கள் அல்லது இழப்புகள் காரணமாக வங்கி அதிக ஆபத்தை எதிர்கொள்கிறது.

- 35 எண்ணிக்கையிலான நீர் பவுசர்களும், 4

செயல்படுத்தப்பட்டன.

உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவையாக உள்ள காலப்பகுதிக்கு 7.5% வருடாந்த வட்டி விதிக்கப்படும்.

ஒவ்வொரு வாகனத்திற்கும் விரிவான காப்புறுதி உரிய அரசாங்க நிறுவனத்தால் பெறப்பட்டு இலங்கை வங்கிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

வாகன விநியோகம் நிதி அமைச்சால் செய்யப்படுகிறது. குத்தகை வசதிகளுக்கு நிதியளிக்கப்பட்ட தொகையுடன் வங்கி செலுத்தும் காப்புறுதி கிரயம் சேர்க்கப்பட்டுள்ளது.

ஒதுக்கப்பட்ட நிறுவனத்தால் உரிய முற்றக் காப்புறுதி (yard insurance) ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| | எண்ணிக்கையிலான Hilux கெப் வண்டிகளும்இறக்குமதி செய்ய முன்னர் தீர்மானிக்கப்பட்ட தேவை இல்லாத காரணத்தால் அல்லது அவற்றை தேவையான தரப்பினரிடையே விநியோகிப்பதற்கான தற்போதைய திட்டம் இல்லாததால் விநியோகிக்கப்பட்டு பதிவு செய்யப்படவில்லை. இந்த வழங்கப்படாத வாகனங்களுக்கான காப்புறுதி கட்டுப்பணத்தை வங்கி செலுத்துகிறது, இதனால் வங்கிக்கு கணிசமான கிரயம் ஏற்பட்டது. 2021 ஒக்தோபர் முதல் 2022 ஆகஸ்ட் வரையிலான காலப்பகுதிக்காக ரூபா 1,034,982 காப்புறுதி கட்டுப்பணத் தொகை வங்கியால் செலுத்தப்பட்டுள்ளது.<br><br>• உடனடி விநியோகத்திற்கு தயாராக இல்லாத 25 ஆம்புலன்ஸ்கள் 2022 மார்ச் முதல் காப்புறுதி பூட்கையில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. எனவே, குத்தகை வசதிகள் இன்னும் இருப்பதால், இந்த ஆம்புலன்ஸ்களுக்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டால், சேதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வழி இல்லை. இன்னும் வங்கியால் உருவாக்கப்படவில்லை. மேலும் முழுமையான உரிமைத்துவம் இன்னும் வங்கியிடம் உள்ளது. | | |
| (iii) | 2020 ஒக்தோபர் 19 இல் வழங்கப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையிலும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் (MUDH) 2020 நவம்பர் 06 மற்றும் 2020 நவம்பர் 17 ஆம் திகதிய கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையிலும், MUDH வங்கியின் 3 அபிவிருத்தி செய்யப்பட்ட சொத்துக்களை கொவிட்-19 ஆல் பாதிக்கப்பட்ட நபர்களுக்கான தனிமைப்படுத்தல் மையங்களை ஆரம்பிப்பதற்கு இலங்கை தரைப்படைக்கு தற்காலிகமாக ஒப்படைக்குமாறு கோரியது. இதனையடுத்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் கோரிக்கையின் அடிப்படையில் மேலும் 2 சொத்துக்கள் மாற்றப்பட்டுள்ளன. சொத்துக்கள் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து பணிப்பாளர் சபையின் மேவுகை அங்கீகாரங்கள் பெறப்பட்டுள்ளன. இந்த கையளிப்பு தற்காலிக அடிப்படையில் செய்யப்பட்டுள்ளது மேலும் இது தொடர்பாக வங்கியால் எந்த முறையான உடன்படிக்கையும் | கருத்துரைகள் குறித்துக் கொள்ளப்பட்டன. | 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் 49 ஆம் பிரிவைக் கடைப்பிடிப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் பகிர்ந்தளிக்கப்பட்ட சொத்துக்களை மாற்றுவதற்கு முன்னர் இழப்பீடு தொடர்பாக வங்கி பேச்சுவார்த்தை நடாத்தியிருக்கவில்லை.

தற்போது நகர அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக காணி சுவீகரிப்பு சட்டத்தின் கீழ் GOSL ஆல் சொத்துக்கள் கையகப்படுத்தப்பட உள்ளன. 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் 49 ஆம் பிரிவை மீறும் சாத்தியக்கூறுகள் இருக்கக்கூடும் என்று CBSL சுட்டிக்காட்டியுள்ளது, ஏனெனில், பகிர்ந்தளிக்கப்பட்ட சொத்துக்களை மாற்றுவதற்கு முன்னர் இழப்பீடு தொடர்பாக வங்கி பேச்சுவார்த்தை நடாத்தத் தவறியமை மற்றும் அரசாங்க பிரதம மதிப்பீட்டாளரால் நிர்ணயிக்கப்பட்ட பெறுமதியின் சாத்தியக்கூறுகள் அத்தகைய சொத்துக்களின் சந்தை பெறுமதியை விட குறைவாக இருத்தல் என்பனவாகும். அரசாங்க பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீடு இன்னும் நிலுவையாக உள்ளது.

பின்வரும் அட்டவணை 5 பகிர்ந்தளிக்கப்பட்ட ஆதனங்களின் விவரங்களைக் காட்டுகிறது.

| இல. | ஆதன விபரம் | வசதி பரிமாற்ற திகதி | பணிப்பாளர் சபை அங்கீகார திகதி |
|---|---|---|---|
| 01 | ட்ரை-ஸ்டார் அப்பரல் எக்ஸ்போர்ட் (பிறைவேட்) லிமிட்டட் - இல. 30, மாளிகாவ, இரத்மலானை | 10/11/2020 | 03/12/2020 |
| 02 | கமல் கேபிள்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் - இல. 30, கண்டாவளை வீதி, இரத்மலானை | 10/11/2020 | 03/12/2020 |
| 03 | ட்ரை-ஸ்டார் அப்பரல் எக்ஸ்போர்ட் (பிறைவேட்) லிமிட்டட் - இல. 88, | 14/12/2020 | 03/12/2020 |

| | | | |
|---|---|---|---|
| | தெல்வள, இரத்மலானை | | |
| 04 | ட்ரை-ஸ்டார் அப்பரல் எக்ஸ்போர்ட் (பிறைவேட்) லிமிட்டட் - இல. 154, ராகுல மாவத்தை, கட்டுபெத்த, மொறட்டுவை | 16/02/2021 | 18/03/2021 |
| 05 | ட்ரை-ஸ்டார் அப்பரல் எக்ஸ்போர்ட் (பிறைவேட்) லிமிட்டட் - இல 29/5, கண்டாவளை வீதி, இரத்மலானை | 16/02/2021 | 18/03/2021 |

### 3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வங்கிக்குச் சொந்தமான யோர்க் தெருவில் அமைந்துள்ள மொத்த பரப்பளவான 261,610 சதுர அடியில் 6 மாடிக் கட்டிடத்தின் 163,890 சதுர அடி பரப்பளவு 2013 ஆம் ஆண்டு வரை பெருநகரக் கிளை மற்றும் மேல் மாகாண வடக்கு அலுவலகம் ஆகியவற்றால் பயன்படுத்தப்பட்டதுடன் மீதமுள்ள தரைப் பகுதி ஹோட்டல் கொழும்பு (1963) லிமிட்டட்டால் இன்னும் பயன்படுத்தப்படுகிறது. கணிசமான பகுதி அல்லது கட்டிடத்தின் 60 சதவீதத்திற்கும் அதிகமான பகுதி 2013 முதல் விளைவற்று உள்ளது. 2016 ஒக்தோபர் 17 ஆம் திகதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடத்தின் பெறுமதி ரூபா 3,413 மில்லியன் ஆகும்.<br><br>ஹோட்டல் கொழும்பு (1963) லிமிட்டட்டை (GOH) செலந்திவ இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டட்டுடன் (SIL) ஒருங்கிணைப்பதற்கும், 2020 மார்ச் 04 மற்றும் 2020 யூலை 08 ஆம் | இந்த விடயம் மேலதிக தீர்மானத்திற்காக நிலுவையாக உள்ளது. | உரிமை மாற்ற செயன்முறையை விரைவுபடுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் யோர்க் தெரு கட்டிடத்தின் (YSB) உரிமைத்துவத்தை SIL இற்கு மாற்றுவதற்கும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. எனினும் உரிமை மாற்ற செயன்முறை இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) இலங்கை வங்கியினால் வெளியிடப்பட்ட பெறுகை வழிகாட்டலின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் 2021 ஆம் நிதியாண்டுக்கான பெறுகை திட்டம் வங்கியால் தயாரிக்கப்பட்டடிருந்த போதிலும், பெறுகைத் திட்டம் 2006 இல் தேசிய பெறுகை முகவராண்மையால் வெளியிடப்பட்ட பெறுகைக் கையேட்டின் 4.2.1 ஆம் பிரிவில் பரிந்துரைக்கப்பட்டுள்ளவாறு போதுமான விபரங்களை வழங்கியிருக்கவில்லை. | வரவிருக்கும் பெறுகை திட்டத்தில் இந்த இடைவெளிகளை சரி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும்.<br>இலக்கு திகதி:- 2023.01.31 | நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பெறுகைத் திட்டத்தை அங்கீகரிப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (ii) 2021 ஆம் ஆண்டில் வங்கியின் இலக்கு பெறுகை நடவடிக்கைகளுக்கு எதிராக அடைந்துகொள்ளப்பட்ட முன்னேற்றத்தை பகுப்பாய்வு செய்யும் போது கணிசமான விலகல்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன. | வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் அப்போதைய நிலமையின் அடிப்படையில் நிதி பயன்படுத்தப்பட்டது. | உண்மையான சூழ்நிலைகளின் அடிப்படையில் வருடாந்த பாதீட்டை தயாரிப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| பெறுகை வகை | 2021 ஆம் ஆண்டுக்கான பாதீடு | 2021 ஆம் ஆண்டிற்கான உண்மையான செலவினம் | வேறுபாடு | வேறுபாடு |
|---|---|---|---|---|
| | (ரூபா.'000) | (ரூபா.'000) | (ரூபா.'000) | % |
| அலுவலக இயந்திரங்கள் / அலுவலக உபகரணங்கள் | 358,340 | 56,556 | 301,784 | 84% |
| தளபாடங்கள் | 55,209 | 37,724 | 17,485 | 32% |
| பாதுகாப்பு உபகரணங்கள் | 207,000 | 1,475 | 205,525 | 99% |

| | | | | |
|---|---|---|---|---|
| வாகனங்கள் | 405,000 | - | 405,000 | 100% |
| கணனி உபகரணங்கள் | 5,351,500 | 884,035 | 4,467,465 | 83% |
| நிர்மாணங்கள்/ கட்டிட செயற்திட்டங்கள் | 3,748,680 | 1,232,425 | 2,516,255 | 67% |
| புதிய காணிகளின் கொள்வனவு | 1,105,500 | 25,062 | 1,080,438 | 98% |
| சீபாங் ஹொலிடே ஹோம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 36,241 | 23,414 | 12,827 | 35% |
| நிகழத்தக்கவகள் | 100,000 | - | 100,000 | 100% |
| மொத்தம் | **11,367,470** | **2,260,691** | | |

**3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) 2021 ஆம் நிதியாண்டிற்கான வங்கியின் வெற்றிடங்கள் பின்வரும் அட்டவணையில் சித்தரிக்கப்பட்டுள்ளன. | கூட்டுத்தாபன நிலையில் CIO பதவி மாத்திரமே வெற்றிடமாக உள்ளது. மேலும் 2022.10.27 இல் உள்ளவாறு நிறைவேற்று நிலை பதவியில் வெற்றிடங்கள் காணப்படவில்லை. வங்கி ஒப்பந்த அடிப்படையில் ஒரு CIO ஒருவரை ஆட்சேர்ப்பு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது.<br><br>மேலும், வங்கி உயர் தரங்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு பல ஊழியர்களுக்கு பதவி உயர்வு | வங்கியின் செயற்பாடுகள் சீராக நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்கு வெற்றிட பதவிநிலைகளுக்கு பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| நிலை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்கள் | வெற்றிடங்கள் (அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் % ஒன்றாக) |
|---|---|---|---|---|
| கூட்டுத்தாபன நிலை | 20 | 17 | 3 | 15 |
| நிறைவேற்று நிலை | 56 | 55 | 1 | 2 |
| செயற்பாட்டு நிலை | 10,848 | 9,705 | 1,143 | 11 |
| மொத்தம் | **10,924** | **9,777** | **1,147** | **10** |

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபன நிலையில் 15 சதவீத பதவியணியனரும், நிறைவேற்று மட்டத்தில் 2 சதவீத

| | | | |
|---|---|---|---|
| | பதவியணியினரும், செயற்பாட்டு மட்டத்தில் 11 சதவீத பதவியணியினரும் வெற்றிடமாக இருப்பது அவதானிக்கப்பட்டது. | வழங்கியுள்ளதுடன் நுழைவு நிலை வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்களை கோரியுள்ளது. | |
| (ii) | 01 உதவிப் பொது முகாமையாளர், 12 பிரதம முகாமையாளர்கள், 64 சிரேஷ்ட முகாமையாளர்கள், 61 முகாமையாளர்கள், 167 நிறைவேற்று உத்தியோகத்தர்கள், 578 கனிஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர்கள், 44 இரகசியச் செயலாளர்கள், 360 பதவியணி உதவியாளர்கள், 132 செயலாளர்கள், 50 தொழில்நுட்பவியலாளர்கள், 231 பாதுகாப்பு பதவியணியினர் மற்றும் 06 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நிறைவேற்று மற்றும் செயற்பாட்டு நிலைகளின் வெற்றிடங்களில் உள்ளடங்குகின்றன. | வங்கி 2022.03.08 இல் 36 பிரதம முகாமையாளர்களுக்கும், 2021.12.21 இல் 77 சிரேஷ்ட முகாமையாளர்களிற்கும், 2021.12.14 இல் 162 முகாமையாளர்களுக்கும், 2021.08.05 இல் 381 நிறைவேற்று உத்தியோகத்தர்களிற்கும், 2022.02.08 இல் 50 பதவியணி உதவியாளர்களிற்கும், 2022.10.25 இல் 06 பாதுகாப்பு உத்தியோகத்தர்களிற்கும் பதவி உயர்வு வழங்கியிருந்ததுடன் பதவி உயர்வு பணிகள், செயல்பாட்டுச் சிக்கல்களால் தாமதமாகலாம்.<br><br>மேலும், பயிற்சி பதவியணி உதவியாளர்கள், முகாமைத்துவ பயிற்சியாளர்கள், முறைமை பகுப்பாய்வாளர்கள் / வலையமைப்பு பொறியியலாளர்கள், பயிற்சி செயலாளர் உதவியாளர்கள் போன்ற நுழைவு நிலை பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு வெளி விண்ணப்பதாரர்களிடம | வங்கியின் செயற்பாடுகள் சீராக நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்கு வெற்றிட பதவிநிலைகளிற்கு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

ிருந்து விண்ணப்பங்களை வங்கி கோரியுள்ளது.

எனினும், அரச துறையில் அனைத்து ஆட்சேர்ப்புக்களையும் இடைநிறுத்துவதற்கான அரசாங்க உத்தரவுகளின் காரணமாக இந்த ஆட்சேர்ப்புக்களை பூர்த்தி செய்ய முடியவில்லை (திறைசேரி செயலாளரால் வெளியிடப்பட்ட 2022.04.26 மற்றும் 2022.08.08 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம்).

ஆனால், தேக்கமடைந்த ஆட்சேர்ப்புக்களை மீண்டும் தொடங்குவதற்குத் தேவையான அங்கீகாரங்களை பெறும் பணியில் வங்கி உள்ளது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 – 2022 இற்கு தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் வங்கியின் தெரிவுசெய்யப்பட்ட இலக்கு நடவடிக்கைகளுக்காக அடைந்து கொள்ளப்பட்ட முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. | கருத்துரைகள் குறித்துக் கொள்ளப்பட்டன. | கூட்டிணைந்த திட்டத்தை யதார்த்தமான அடிப்படையில் தயாரிப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| பிரிவு | 2020-2022 கூட்டிணைந்த திட்டத்தி | உள்ளபடியானது 2020 | எதிர்பார்ப்பு 2021 | உள்ளபடியானது 2021 | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **ன் பிரகாரம் குறிக்கோள்** | | | | |
| சர்வதேசம் | தங்கக் கடையின் இலாபத்தை வருடாந்தம் 10 சதவீதத்தால் அதிகரித்தல். | 9.1 மில் | 10.01 மில் | 41.8 மில் | 2021 ஆம் ஆண்டில் இலக்கு அதிகரிப்பை விட தங்கக் கடையின் இலாபம் 359 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. |
| | சர்வதேச பிரிவின் கட்டணம் மற்றும் தரகு வருமானத்தை 15 சதவீதத்தால் அதிகரித்தல். | 445 மில் | 511.75 மில் | 884 மில் | 15 சதவீத இலக்குக்கு பதிலாக, கட்டணம் மற்றும் தரகு வருமானம் 98.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. |
| | BIA Counters இல் வணிக அளவை ஆண்டுக்கு 10 சதவீதத்தால் அதிகரித்தல். | 1,378.12 மில் | 1,515.932 மில் | 2,098.12 மில் | 10 சதவீத இலக்குக்கு பதிலாக, BIA Counters இல் வணிக அளவு 52 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. |
| திறைசேரி | அந்நியச் செலாவணி வருமானத்தை ஆண்டுக்கு 10 சதவீதத்தால் அதிகரித்தல். | 4,111 மில் | 4,522.1 மில் | 8,856 மில் | 2021 ஆம் ஆண்டில் அந்நிய செலாவணி வருமானம் 115.4 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. |
| **வெளிநாட்டு கிளைகள்** | | | | | |
| வெளிநாடுகளி | முற்பணங்கள் - | 10,168 மில் | 11,184.8 மில் | 11,257.5 மில் | 2021 ஆம் ஆண்டில் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ல் உள்ள கிளைகளின் கடன் போர்ட்டோபாலியோவை 10 சதவீதத்தால் அதிகரித்தல் | சென்னை கிளை | | | | முற்பணம் 10.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. |
| | முற்பணங்கள் - Male கிளை | 31,888.06 மில் | 35,076.86 மில் | 36,613.97 மில் | 2021 ஆம் ஆண்டில் முற்பணம் 14.8 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. |
| | முற்பணங்கள் - சீஷெல்ஸ் கிளை | 1,078.94 மில் | 1,186.834 மில் | 1,845.73 மில் | 2021 ஆம் ஆண்டில் முற்பணம் 71 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. |

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) 2021 ஆம் நிதியாண்டில் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்வு திட்டத்திற்கு எதிராக அடைந்துகொள்ளப்பட்ட முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. | கருத்துரைகள் குறித்துக் கொள்ளப்பட்டன. | உள்ளக கணக்காய்வு திட்டத்தை இலக்கிடப்பட்டவாறு அடைந்துகொள்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| **விபரம்** | **இலக்கு** | **உள்ளபடியானது** | **வேறுபாடு** |
|---|---|---|---|
| | **2021** | **2021** | |
| முழு கிளை கணக்காய்வு & மாகாண அலுவலக கணக்காய்வு | 136 | 161 | **25** |
| கிளை திடீர் கணக்காய்வுகள் | 70 | 164 | **94** |
| கிளை கணக்காய்வுகள் - பின்தொடர் நடவடிக்கைகள் | 2 | 72 | **70** |
| தலைமை அலுவலகம் பிரிவு கணக்காய்வுகள் | 89 | 121 | **32** |
| தகவல் முறைமை கணக்காய்வுகள் | 1810 | 1770 | **(40)** |

| | | | |
|---|---|---|---|
| மொத்தம் | **2107** | **2287** | **180** |

(ii) 2020 மற்றும் 2021 ஆம் நிதியாண்டுகளில் உள்ளக கணக்காய்வு பிரிவின் பதவியணியினர் வெற்றிடங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. 2021 ஆம் நிதியாண்டில் உள்ளக கணக்காய்வு பிரிவில் 187 ஊழியர்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருடன் ஒப்பிடும் போது ஐம்பத்தொரு (51) வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டன. முன்னைய ஆண்டிலும் இதேபோன்ற வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய அதிகாரிகளால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| **பதவியணியினர் வகை** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** | |
|---|---|---|
| | **2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | **2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** |
| பட்டய கணக்காளர்கள் வங்கி அல்லாதவை | 02 | 07 |
| பிரதம முகாமையாளர் / சிரேஷ்ட முகாமையாளர் | 10 | 09 |
| கிளை முகாமையாளர் | 07 | 15 |
| உதவி முகாமையாளர் | 06 | 04 |
| நிறைவேற்று உத்தியோகத்தர்/ நிறைவேற்று கணக்காய்வு உத்தியோகத்தர்/ கனிஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர்/ கனிஷ்ட கணக்காய்வு உத்தியோகத்தர் | 25 | 15 |
| பதவியணி உதவியாளர்/ கணக்காய்வு உதவியாளர் | (03) | (01) |
| இரகசிய செயலாளர் | 05 | 05 |
| செயலாளர் உதவியாளர் | (01) | 01 |
| **மொத்தம்** | **51** | **55** |

தலைமை அலுவலகத்திற்கு 96 ஊழியர்களும், மாகாணங்களுக்கு 41 ஊழியர்களும் உள்ளக கணக்காய்வு பிரிவிற்கு ஒதுக்கப்பட்டதுடன் 2022 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம் 2022.10.27 இல் உள்ளவாறு 5 வெற்றிடங்கள் மாத்திரமே உள்ளன. மீதமுள்ள 5 வெற்றிட பதவிநிலைகள் எதிர்கால ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வு பணி ஒதுக்கீடுகள் மற்றும் இடமாற்றங்களுடன் நிரப்பப்படும். இலக்கு திகதி :- 2023.03.31

உள்ளக கணக்காய்வு பிரிவின் சீரான செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக வெற்றிட பதவிநிலைகளுக்கு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

**கணக்காய்வு விடயம்**

-----------------------------------

பாதீட்டு நிதியேற்பாட்டை வங்கியின் உண்மையான முடிவுகளுடன் ஒப்பிடும் போது 16 சதவீதம் முதல் 47 சதவீதம் வரையிலான வீச்சில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*ரூபா. மில்*

| விபரம் | உள்ளபடியானது 2021 | பாதீடு 2021 | வேறுபாடு 2021 | வேறுபாடு % |
|---|---|---|---|---|
| மொத்த வருமானம் | 290,362 | 249,300 | 41,062 | 16.47 |
| VAT & NBT இற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் | 52,217 | 42,258 | 9,959 | 23.57 |
| வரிக்கு முன்னரான தேறியலாபம் | 43,190 | 33,682 | 9,508 | 22.50 |
| வரி செலவினங்கள் | 5,599 | 8,084 | 2,485 | 30.74 |
| காலப்பகுதிக்கான தேறியலாபம் | 37,590 | 25,598 | 11,992 | 46.85 |

**முகாமைத்துவக் கருத்துரை**

-------------------------

கருத்துரைகள் குறித்துக் கொள்ளப்பட்டன.

**பரிந்துரை**

----------------

பாதீட்டு இலக்குகளை அடைந்துகொள்வதற்காக வங்கியின் செயற்திறனை மேம்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.